Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும்
பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்
இல. 13, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3916, 0777 801038 (சி/2485)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 வைகாசி 30 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.ஆசிர் 23 (12.06.2004) சனிக்கிழமை இதழ்:254

# அரசாங்கத்தைக் காப்பாற்றுவதற்கு சிறுபான்மைக் கட்சிகளின் தயவை நாடுவதற்கு ஜனாதிபதி தீர்மானம்!

## இ.தொ.காவை சமரசப்படுத்த முயற்சி

(கொழும்பு)

**நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து பொதுவான கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கியதை அடுத்து -**

**ஜனாதிபதி சந்திரிகா ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசைக் காப்பாற்றும் பொருட்டு சிறுபான்மைக் கட்சிகளின் தயவை நாட முடிவெடுத்திருப்பதாகத் தெரியவருகின்றது.**

ஆளும் கட்சிக்கும், ஜாதிக ஹெல உறுமயவுக்கும் இடையிலான முறுகல் நிலை உச்சக்கட்டத்தை எட்டியிருக்கும் நிலையில்-

சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவைப் பெற்று தமது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க வேண்டிய நிலைக்குள் ஜனாதிபதி சந்திரிகா தள்ளப்பட்டிருக்கிறார்.

இதன் ஒரு கட்டமாக - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெறும் நோக்கில் நேற்று முன்தினம், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசினார். ‘

இதன்போது - கூட்டமைப்பினரின் கோரிக்கைகளைச் சாதகமாகப் பரிசீலிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் - இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவைப பெறுவதற்கும் ஜனாதிபதி சந்திரிகா மீளவும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

இந்தவகையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தண்ணீர் பவுசர் விபத்துக்குள்ளாகி புளியங்குளத்தில் இளைஞர் பலி!

வவுனியா - புளியங்குளம் பகுதியில், தண்ணீர் பவுசர் ஒன்று நேற்றுக் காலை விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

புளியங்குளம் - கந்தநெல்லுக்கமம் என்ற இடத்தில் நேற்றுக் காலை 9 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தண்ணீர் பவுசர் தடம்புரண்டதிலேயே - அதில் பயணம்செய்த நெடுங்கேணியைச் சேர்ந்த செல்லததுரை குமரேசன் (வயது 18) என்ற இளைஞர் உயிரிழந்தார்.

இநதச் சம்பவத்தில் காயமடைந்த இன்னொருவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து தமிழீழ காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நிலக்கண்ணியில் எல்வ் சிக்கி பரந்தனில் மூவர் உயிரிழப்பு!

(கிளிநொச்சி)

பரந்தன் பகுதியில் படையினரால் முன்னர் புதைத்து வைக்கப்பட்டிருந்த வாகனக் கண்ணி வெடியில் எல்வ் வான் ஒன்று சிக்கியதில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று மாலை 4 மணியளவில் பரந்தன் முல்லைத்தீவு வீதியில் - 1 ஆம் கட்டை, நாலாம் குறுக்குப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது -

கண்ணிவெடி அகற்றப்படாத அபாய பிரதேசமாக எச்சரிக்கை செய்யப்பட்ட சிறுவீதியூடாக மேற்படி எல்வ் வான் சென்று திரும்பிய போதே வாகனம் அமுக்க கண்ணி வெடியில் சிக்கியது.

இந்தச் சம்பவத்தில் வானில் இருந்த மூவர் உயிரிழந்தனர். குருநாகலைச் சேர்ந்த வான்சாரதியான அமரசிங்க தயாரத்ன (வயது 47), சிவநகர் உருத்திரபுரம் கிளிநொச்சியைச் சேர்ந்த செல்லத்துரை சுரேஷ் (வயது 25), ஆழியவளை, தாளையடியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான அம்புறோஸ் அலெக்ஸ் புரூஸ்ரன் (வயது - 35) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

மேற்படி வாகன உரிமையாளர் மிதிவெடி அகற்றப்படாத - தடை செய்யப்பட்ட பகுதியொன்றில் வயல காணியொன்றை புல்டோசர் மூலம் திருத்துவதற்கு விவசாயி ஒருவர் விடுத்த அழைப்பை ஏற்று, அதனைப் பார்வையிட்டுவிட்டு திரும்பியபோதே இந்தச் சம்பவம் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மரணவிசாரணையை அடுத்து இறந்தவர்களின் சடலங்கள் நேற்றிரவு உறவினர்களிடம் கையளிக்கப் பட்டன.

## மட்டக்களப்பு - ஓட்டமாவடியில் உரப்பையினுள் கட்டப்பட்ட

## அமெரிக்க உயர் அதிகாரிகள் குழு யாழ்.செயலகத்துக்கு வருகின்றது!

அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக் களம் மற்றும் இராஜாங்கத் திணைக்

யம் செய்யவுள்ளது.

யாழ்செயலகத்தில் அரசாங்க அதி

குடாநாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாகவும் அமெரிக்கா

## மட்டக்களப்பு - ஓட்டமாவடியில்

# உரப்பையினுள் கட்டப்பட்ட ஆணின் சடலம் மீட்கப்பட்டது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஓட்டமாவடி வாவிப் பகுதியில் உரப்பையினுள் கட்டப்பட்டிருந்த நிலையில் சடலமொன்று நேற்று கண்டுபிடிக்கப்பட்டது.

நேற்றுக்காலை குறிப்பிட்ட வாவிப்பகுதிக்குச்சென்ற பொதுமக்கள் உரப்பையினுள் சடலம் ஒன்று அழுகிய நிலையில் இருப்பதனைக் கண்டு மட்டக்களப்பு பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

சுமார் 22 வயது மதிக்கத்தக்க இந்த ஆணின் சடலம் இராணுவச் சீருடையுடன் காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## நாகர்கோவில் தளத்திலிருந்து

# இரண்டு இராணுவத்தினர் காணாமற்போயுள்ளனராம்

(யாழ்ப்பாணம்)

நாகர்கோவில் இராணுவத் தளத்தில் பணியாற்றும் லெப்ரினன்ட் தர இராணுவ அதிகாரியொருவரையும், சிப்பாய் ஒருவரையும் கடந்த சில நாட்களாகக் காணவில்லை என இராணுவத்தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது-

இரண்டாம் லெப்டினன்ட் டபிள்யூ. கே.எஸ்.விக்கிரமாராட்சி மற்றும் அவரது உதவியாளரான பிறைவேற் ஜே.ரி.பி.கருணாரத்ன ஆகியோரே கடந்த எட்டாம் திகதிமுதல் காணாமற்போயுள்ளனர்.

நாகர்கோவிலில் நிலைகொண்டி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். செயலகத்துக்கு வருகின்றது!

அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் இராஜாங்கத் திணைக்களம் ஆகியவற்றைச் சேர்ந்த உயர் மட்ட அதிகாரிகள் குழுவொன்று இன்று யாழ். செயலகத்துக்கு விஜயம் செய்யவுள்ளது.

யாழ்செயலகத்தில் அரசாங்க அதிபருடன் இன்று பிற்பகல் 2 மணியளவில் இடம்பெறும் கலந்துரையாடலில் இந்த அதிகாரிகள் குழு பங்கேற்கவுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம்; அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களம், அமெரிக்கத் தூதரகம் ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகளே இந்தச் சந்திப்பில் பங்கேற்கவுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது - யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாகவும் அமெரிக்காவின் அனுசரணையுடன் யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்படும் எனத் தெரியவருகிறது.

குறிப்பாக மிதிவெடி அகற்றும் செயற்பாடுகள் குறித்து அமெரிக்க அதிகாரிகள் இந்தச் சந்திப்பில் விசேட கவனம் செலுத்துவர் என்றும், இந்தப் பணிக்காக 35 லட்சம் ரூபா நிதியுதவியை வழங்குவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## ஜனாதிபதி சந்திரிகா இன்று விசேட உரை

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா இன்றிரவு 8.30 மணிக்கு ரூபவாஹினி மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்த உள்ளார் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வட்டாரங்கள் நேற்று மாலை தெரிவித்தன.

பெரும்பான்மையை இழந்துள்ள நிலையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கக்கூடிய கட்டாயம் எழுந்துள்ள சூழலிலே ஜனாதிபதி சந்திரிகாவால் இந்த உரை இடம்பெறவுள்ளது.

நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் பாதுகாக்குமாறு 117 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்திருக்கும் நிலையில் ஜனாதிபதி சந்திரிகாவின் இந்த உரை முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

## நாளையும், நாளை மறுதினமும்

# முகமாலை சோதனைச்சாவடி ஊடான போக்குவரத்து நேரம் அதிகரிப்பு!

புதூர் நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழாவையொட்டி - நாளையும், நாளை மறுதினமும் முகமாலை சோதனைச்சாவடி ஊடான போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படும் நேரம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி சமாதானச் செயலகம் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையிலேயே முகமாலை சோதனைச்சாவடி ஊடான போக்குவரத்துக்கு வழித்துணை வழங்கும் நேரத்தை நீடித்திருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைக்குழு அறிவித்துள்ளது.

வழக்கமாக மாலை 5.30 மணியுடன் மூடப்படும் முகமாலை சோதனைச்சாவடி நாளையும், நாளை மறுதினமும் மாலை 6.30 மணி வரை திறந்திருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

(சி/2489)

# 18ஆம் ஆண்டு நிறைவு நினைவுநாள்

## 12.06.2004 (சனிக்கிழமை)

பெற்ற
அன்னையிடம்
**04.04.1960**



மாவீரரிடம்
**12.06.1986**

பிரபா அண்ணரிடம்
28.10.1983

# லெப். அர்ச்சுனா (ஆர்.பி.ஜி)

## (சதாசிவம் - தமிழரசுவரன்)

பல்லவி

எல்லாம் தமிழ் மயமே
எங்கும் எதிலும் என்றுமே
(எல்லாம்)

அனுபல்லவி

நல்லது உயர்ந்தது நானிலத்தின் முதன்மொழி தமிழ்மொழியே
நங்கையரை வல்லமை யெனவழைத்து நன்னெறி காட்டியது தமிழ்மொழியே
(எல்லாம்)

சரணங்கள்

சங்கம் மூன்றமைத்து சாதனை புரிந்த
சரித்திரம் மறந்து சாரமில்லாப்பல மொழி புகழ்ந்து
சந்ததி நாம் வாழ்வதா தரித்திரராய் மாழ்வதா
சமயமிதுவே நாம் தமிழ் வளர்க்க
(எல்லாம்)

அன்பு அறிவுடன் அகமும் புறமும் தந்தது எந்தமொழி
அன்னையும் தந்தையும் முன்னறி தெய்வமெனச் சொன்னது எந்தமொழி
அறநெறி வாழ்ந்த தமிழா தமிழ் அழிந்தால் நீ அழிவாய்
அமிழ்தினும் இனிய உனது தமிழ்மொழி உயர்ந்தால் நீ உயர்வாய்
(எல்லாம்)

பிள்ளைக்குப் பெயர்வைக்க தமிழ் இல்லையா
பின் எதற்குப் பிறமொழி தேர்ந்தெடுத்தாய்
பித்தனாய் பிறமொழி தேடினயோ - உன்
பிற்சந்ததி தமிழரல்லவே இது சத்தியமே.
(எல்லாம்)

46 அத்தியடி புதுவீதி
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்

(சி/742)

## மட்டு - அம்பாறையில்

# மீன்பிடித் துறைகளை விருத்திசெய்ய ஜப்பானிய அரசாங்கம் உதவ வேண்டும்

## ஜப்பானிய தூதரகக் குழுவிடம் கௌசல்யன் கோரிக்கை

(கொழும்பு)

மட்டக்களப்பு- அம்பாறை மாவட் டங்களில் விவசாயம், மீன்பிடித் தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கென மூல வளங்கள் நிறைய இருந்தும், அவை சரியான முறையில் பயன்படுத்தப்படாதத தால் இந்தத் தொழில்கள் அபிவிருத்தி அடைய வில்லை. எனவே, இவற்றை ஆராய்ந்து அந்தத் தொழில் முயற்சியில் மக்கள் ஈடுபடுவதற்கென ஒத்துழைப்புக் களை நல்கவேண்டும்.

இவ்வாறு மட்டு. அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்திறகான விஜயம் ஒன்றை மேற்கொண்ட ஜப்பானிய தூதரக பொருளாதாரக் குழுவினர் - கொக்கட்டிச்சோலை அரசியற் துறைப் பொறுப்பாளர் கௌசல்யனை சந்தித்து கலந்துரையாடியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜப்பானிய தூதரகத்துக்குப் பொறுப்பான செயலாளர் கொகிவா ஹிட்டோ தலைமையிலான குழுவினரிடம் அவர் மேலும் தெரிவிக்கையில் -

மட்டு. அம்பாறை மாவட்ட மக்களின் முக்கிய ஜீவனோபாயமாக இருககும் தொழில் - விவசாயமும், மீன் பிடித்தலும் ஆகும். விவசாயக் காணிகள் இங்கு நிறையவுள்ளன. நீர்ப்பாசனமுறை திட்டமிட்டமுறையில் அமைக்கப்படாமையாலும், சரியான வடிகால் அமைபபுக்கள் இல்லாததினாலும் பெரும் அளவிலான நீர் விரையமாகின்றது.

புதிய தொழில் நுட்பமுறையில் நீர்ப்பாசன வசதிகளை அமைத்து, நீர் விரையமாகுவதைத் தடுக்க வேண்டும். மாரி காலங்களில் இந்த நீர் பெருக்கெடுத்து வீணாகக் கடலுக்குச் செல்வதைத் தடுத்து நிறுத்தி, சிறு சிறு குளங்களை அமைத்து இந்த நீரைத் தேக்கி வைத்தால், கோடை காலங்களில் விவசாயிகள் பயன்படுத்தலாம்.

மீன்பிடித்தொழிலைப் பொறுத்த மட்டில் இந்தத் தொழிலுக்குரிய வசதி வாய்ப்புக்களைச் செய்து கொடுக்க வேண்டும். மீன்பிடி உபகரணங்கள், வலை, தோணி, முதலியவற்றை மீனவர்களுக்கு அவர்களது அமைப்புக்கள் மூலம் கொடுத்துதவி, இந்தத் தொழிலை அபிவிருத்தி செய்யலாம்.

இந்த இரு தொழில்களுக்குரிய சந்தை வாய்ப்புகளையும், உற்பத்திகளையும் சேமித்து, பாதுகாத்து வைப்பதற்குரிய, நவீன மயப்படுத்தப்பட்ட பாதுகாப்புத் திட்டங்களும் அமைத்துக் கொடுக்கப்படல் வேண்டும்.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் நாவலடியில் இருக்கும் மீன்பிடிப் பயிற்சிக் கல்லூரிக்கு நவீன உபகரணங்களையும், இந்தத் தொழிலுக்கு நன்கு பயிற்றப்பட்ட விரிவுரையாளர்களையும், நவீன மீன்பிடிப் படகுகளையும் அறிமுகப்படுத்தி, இளைஞர்களை ஊக்குவித்து இந்தத் தொழிலில் ஈடுபடுத்துவதற்கு ஒத்தாசை புரிய வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

# திருமலையில் இடம்பெற்ற கூட்டத்தில் 2 எம்.பிக்கள் மட்டுமே பங்கேற்பு

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நேற்றுமுன் தினம் திருகோணமலையில் ஆளுனர் நடத்திய கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் மட்டுமே கலந்துகொண்டனர்.

ஜனாதிபதியின் பணிப்பிற்கு அமைய இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், மாகாண ஆளுநர் அசோக ஜெயவர்த்தன அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனாலும், மாகாணசபைக் கேட்போர்கூடத்தில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜயசேகரா மற்றும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த விஜயதிஸ்ஸ ஆகிய இருவருமே கலந்துகொண்டனர்.

நேற்றுமுன்தினம் காலை 10 மணி முதல் 12 மணிவரை இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், வழக்கு - கிழக்கு மாகாணசபையின் தற்போதைய நிலைமைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(4,10)

# மட்டக்களப்பில் உளநோயியல் புனர்வாழ்வு நிலையம் அமைப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் யுத்தம் மற்றும் ஏனைய காரணங்களால், மனோநிலை பாதிக்கப்பட்ட நோயாளர்களைப் பராமரிப்பதற்கென சுகாதார அமைச்சினால், முதல் தடவையாக மட்டக்களப்பில் உளநோயியல் புனர்வாழ்வு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 20 லட்சம் ரூபா செலவில் மட்டக்களப்பு மாவடிவேம்புப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இந்த நிலையமே கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள முதலாவது உளநோயியல் புனர்வாழ்வு நிலையம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வகையில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் உளநோயாளர்கள் - பூரண சிகிச்சையின் பின்னர் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக இந்த நிலையத்தில் அனுமதிக்கப் படவுள்ளதாக சுகாதார அமைச்சுத் தகவல்கள் தெரிவித்தன.

யுத்தம் மற்றும் ஏனைய காரணங்களால், உளநோயினால் பாதிக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான நோயாளர்கள் இந்த மாகாணத்தில் உள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவக்கும் நிலையில், திருகோணமலை மற்றும் நீலாவணைப் பகுதிகளிலும் இந்தவகையான நிலையங்களைச் சுகாதார அமைச்சு அமைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.






நேற்றுமுன்தினம் மன்னார் - அடம்பனில் திறந்து வைக்கப்பட்ட தமிழீழ காவல்துறை அலுவலகத்தின் பெயர்ப்பலகையை முதலாவது படத்திலும், காவல்துறை கொடி ஏற்றப்படும்போது காவல்துறையினர் மரியாதை செலுத்துவதை கீழுள்ள படத்திலும் காணலாம்

# மீண்டுமொரு பொதுத்தேர்தல் மூலமே நாடாளுமன்ற நெருக்கடிகள் தீரும்

## விமல் வீரவன்ச கூறுகிறார்



(கொழும்பு)

பொதுத்தேர்தல் இடம்பெற்று இரண்டு மாதங்கள் மட்டுமே முடிவடைந்துள்ள நிலையில், இன்னுமொரு பொதுத்தேர்தலை அறிவிக்க வேண்டிய தேவையிருப்பதாக தற்போதைய ஆளும் கட்சியின் பிரதான கூட்டணிக் கட்சியான ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

நிருபர்களிடம் பேசிய ஜே.வி.பி.யின் பேச்சாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான விமல் வீரவன்ச - பொதுத்தேர்தலொன்றுக்கு முகம்கொடுக்க தமது கட்சி தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகளை எதிர்க்கட்சியினர் தீர்மானிப்பதைப் பார்த்துக்கொண்டு எவ்வளவு காலம் பொறுமையாக இருக்க முடியும். நாடாளுமன்றப் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கும் பொருட்டு, மீண்டும் ஒரு பொதுத் தேர்தலை அறிவிப்பதே சரியானதாக இருக்கும் எனக் குறிப்பிட்டார்.

விமல் வீரவன்சவுடன் இணைந்து நிருபர்களைச் சந்தித்த வர்த்தக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே - அதே கருத்தை வழிமொழிந்தார். மக்களிடம் மீண்டும் சென்று, அவர்களது ஆதரவுடன் மீண்டும் ஆட்சியமைக்க, தமது கட்சி நம்பிக்கை கொண்டுள்ளது.

நாடாளுமன்றத்தினுள் பௌத்த துறவிகள் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தை மறுத்த இவர்கள் இருவரும், அப்படியொரு சம்பவம் அங்கே இடம்பெறவில்லை என்றும் தெரிவித்தனர்.

விரைவில் மீண்டும் பொதுத்தேர்தலொன்றை அறிவிக்கும்படி ஜே.வி.பி- ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்குமா என்று கேட்டபோது, அதற்கான அழுத்தத்தைக் கொடுகக நாம் ஆரம்பித்து விட்டோம் என்றார் விமல் வீரவன்ச.

தற்போதைய நாடாளுமன்றத்தல், ஆளும் கட்சியின் பலத்தைவிட, எதிாக்கட்சிக் கூட்டணியின் பலம் அதிகமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### தேதுன்ன ஆக்கத் தொகுப்பு வவுனியாவில் வெளிவருகிறது

தமிழீழ விடுதலைப் புலிகளால் வெளியிடப்படும் சிங்கள மொழியிலான தேதுன்ன பத்திரிகையில், இதுவரை வெளிவந்த இரு ஆக்கங்களின நூல் தொகுப்பு வெளியீட்டு விழா எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

வவுனியா இந்து இளைஞர் மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ள நிகழ்வில் கா.வே.பாலகுமாரனின் 'மௌனித்தவர் மனக்குரல்' பாகம் ஒன்றும், வன்னியிலிருந்து ஓர்மடல் கடிதங்களின் தொகுப்பும் வெளியிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நாடாளுமன்றம் கூடிய ஒவ்வொரு தடவையும் அடாவடித்தனங்களே இடம்பெற்றன

புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டு நான்குமுறை நாடாளுமன்றம் கூடியபோதும் - ஒவ்வொரு முறையும் அமளிதுமளிகளும், அடாவடித்தனங்களுமே இடம்பெற்றதாக நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான ஆறுமுகம் தொண்டமான் விசனம் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளின் முக்கியஸ்தர்கள் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

மக்கள் தமது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்காகவே பிரதிநிதிகளை நாடாளுமன்றத்துக்கு அனுப்புகின்றனர். ஆனால், மக்களது எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப் படாது, அடாவடித்தனங்கள் இடம பெறுவதால் மக்கள் ஏமாற்றம் அடைகின்றனர்.

கௌரவிக்கப்படவேண்டிய மத குருவையே தாக்குகின்ற அளவுக்கு நாடாளுமன்றம் மாறியிருக்கின்றதாயின், சாதாரண மக்கள் தொடர்பாக இவர்களது நடவடிக்கை எவ்வாறு இருக்குமெனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் - அரசின் ஜனநாயக விரோத செயல்களைக் கண்டிப்பதாகவும், அரசு பெரும்பான்மை இன்மையால், சிறுபான்மைக் கட்சிகளை அச்சுறுத்தி, அவர்களது ஆதரவைப் பெற முயல்கின்றார்கள் எனவும் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா - தற்போதைய அரசியல் அமைப்பை எமது கட்சியினர் ஏற்றுக்கொள்ளாத போதும், ஜனநாயகத்தை மதிப்பதாலே எதிர்க்கட்சிகளுடன் இணைந்து, அரசின் இந்தக் கடும் போக்கினை கண்டிப்பதாகவும் தெரிவித்தார்.

## தென்மராட்சி முன்னரங்கப் பகுதியிலிருந்து

# இடம்பெயர்ந்தோர் விபரங்களை படைத்தரப்பினர் கோரியுள்ளனர்

தென்மராட்சி முன்னரங்கு காவலரண் பகுதிகளான உசன், கரம்பன் மற்றும் எழுதுமட்டுவாள் போன்ற இடங்களிலிருந்து, இடம்பெயர்ந்துள்ள மக்களின் விபரங்களை, படைத்தரப்பு கோரியுள்ளது.

இடம்பெயர்ந்தோரின் விபரங்களை முழுமையாகத் திரட்டி, தம்மிடம் கையளிக்குமாறு படை அதிகாரிகள் தென்மராட்சி பிரதேச செயலக அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

தென்மராட்சியின் 55 ஆவது படைப்பிரிவு அதிகாரிகளே இந்த விபரங்களைக் கோரியுள்ளனர்.

ஏற்கனவே யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக இந்த விபரங்கள் படைத்தரப்பிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளபோதும், மீ டும் இந்த விபரங்கள் கோரப்படுவது குறித்து, நிர்வாக அதிகாரிகள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

### ஜப்பான் 8 மில்லியன் ரூபா நிதியுதவி

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் செய்த ஜப்பானிய தூதுக் குழுவினர் - மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்கு 8 மில்லியன் ரூபா வரையான நிதியை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளனர். நேற்றுமுன்தினம் அரசாங்க அதிபரையும், அதிகாரிகளையும் மட்டககளப்பு மாவட்ட அரச செயலகத்தில் சந்தித்து உரையாடினர்.

அரச அதிபர் மாவட்டத்தின் நிலவரம் குறித்து, ஜப்பானிய குழுவினருக்கு விளக்கமளித்தார்.

# பதினாறு நாடுகள் பங்குகொள்ளும் ஐரோப்பியகிண்ண கால்பந்துப் போட்டி

## இன்று போர்த்துக்கலில் ஆரம்பம்

உலகக்கிண்ண கால்பந்து போட்டியை அடுத்து மிகவும் பிரபலமான ஐரோப்பிய கிண்ண கால்பந்து இன்று ஆரம்பமாகவுள்ளது. இந்தப் போட்டி உலகக் கிண்ணப் போட்டி போலவே ஐரோப்பிய கிண்ணப் போட்டியும் நான்கு ஆண்டுக்கு ஒருமுறை நடைபெற்றுவருகின்றது.

ஐரோப்பிய கண்டத்தில் உள்ள நாடுகள் மட்டுமே விளையாடுகின்றன.

12 ஆவது ஐரோப்பிய கிண்ணக் கால்பந்துப்போட்டி போர்த்துக்கலில் இன்று தொடங்குகின்றது. ஜுலை 4 ஆம் திகதிவரை இந்தப் போட்டி நடைபெறும்.

இதில் தற்போதைய சம்பியனான பிரான்ஸ், ஜேர்மனி இங்கிலாந்து, உட்பட 14 நாடுகள் பங்கேற்கின்றன. இவை நான்கு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலும் இடம்பெற்றுள்ள நாடுகள்வருமாறு -

ஏ - போர்த்துக்கல், ஸ்பெயின், கிரீஸ், ரஷ்யா,

பி - பிரான்ஸ், இங்கிலாந்து சுவிற்சர்லாந்து, குறோசியா,

சி - இத்தாலி, சுவீடன், பல்கேரியா, டென்மார்க்.

டி - ஜேர்மனி, செக்குடியரசு, கொலன்ட், லத்வியா,

லீக் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் கால்இறுதிக்குத் தகுதிபெறும்.

24 ஆம் திகதி கால்இறுதியாட்டம் தொடங்குகின்றது. அரையிறுதியாட்டங்கள் ஜுன் 30 மற்றும் ஜுலை முதல் திகதியும் இறுதிப்போட்டி 4ஆம் திகதியும் நடைபெறும்.

போர்த்துக்கலிலுள்ள ஐந்து நகரங்களில் ஒன்பது மைதானங்களில் இந்தப்போட்டி நடக்கும். இதன் தொடக்க ஆட்டத்தில் போட்டியை நடத்தும் போர்த்துக்கல் - கிரீஸ், ஸ்பெயின் - ரஷ்ய அணிகள் மோதுகின்றன.

பிரான்ஸ், இங்கிலாந்து, ஜேர்மனி, போர்த்துக்கல் ஆகிய நாடுகள் இந்தப்போட்டியில் வலுவானதாகவுள்ளது. ஷீடேன் (பிரான்ஸ்) பீகோ (போர்த்துக்கல்) போன்ற உலகின் தலைசிறந்த வீரர்கள் இதில் ஆடுகின்றார்கள்.

2000 ஆம் ஆண்டு ஐரோப்பிய கிண்ணப்போட்டி ஹொலன்ட், பெல்ஜியத்தில் நடந்தது. இதில் பிரான்ஸ் 2:1 என்ற கணக்கில் இத்தாலியை வென்று, சம்பியன் பட்டம் பெற்றது.

ஜேர்மனி அதிகபட்சமாக ஐரோப்பிய கிண்ணத்தை மூன்றுமுறைகள் கைப்பற்றியது. 1972, 1980, 1996 ஆம் ஆண்டுகளில் இந்த அணி சம்பியன் பட்டம் பெற்றது. பிரான்ஸ் இரண்டுமுறையும் (1984, 2000) இத்தாலி, கொலன்ட், ரஷ்யா, ஸ்பெயின், டென்மார்க், செக்குடியரசு ஆகிய நாடுகள் தலா ஒருமுறையும் பட்டம் பெற்றன.

## சிம்பாப்வே அணியின் டெஸ்ட் அந்தஸ்து இவ்வாண்டுவரை ரத்து!



சர்வதேச கிரிக்கெட் சபை, டெஸ்ட் போட்டிகளில் சிம்பாப்வே அணி, இவ்வாண்டு இறுதிவரை விளையாட தடைவிதிக்கமுடிவு செய்ததையடுத்து,

இந்த வருடம் நடைபெறவிருந்த அனைத்து டெஸ்ட் போட்டிகளையும் சிம்பாப்வே அணி ரத்துச்செய்திருக்கிறது.

நேற்றுமுன்தினம் டுபாயில் நடந்த கூட்டத்தில் டெஸ்ட் போட்டிகளில் விளையாட சிம்பாப்வேக்கு தடைவிதிக்க சர்வதேச கிரிக்கெட் சபை தீர்மானித்தது.

இந்த முடிவுக்கு சிம்பாப்வே கிரிக்கெட் சபை இணக்கம் தெரிவித்தது. இதனையடுத்து, எதிர்வரும் ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் நடைபெறத் திட்டமிட்டிருக்கும் இங்கிலாந்து அணியின், விஜயத்தின்போது, ஒருநாள் போட்டிகளைமட்டுமே நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், பாகிஸ்தான் அணியுடனான டெஸ்ட்போட்டிகளும் ரத்துச்செய்யப்பட்டிருப்பதுடன், இவை அனைத்தும் ஒருநாள் போட்டிகளாக குறிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிம்பாப்வே அணியில் இனப்பாகுபாடு காட்டப்பட்டு வெள்ளையின வீரர்கள் புறக்கணிக்கப்படுவதாக எழுந்த புகாரையடுத்து சர்வதேச கிரிக்கெட் சபை விசாரணைகளை நடத்தி இந்த முடிவை எடுத்தது குறிப்பிடத்தக்கதாகும்.




## ஆசியக் கிண்ணப் போட்டியில் சொகைப் அக்தர் இடம் பெறுவார்!



(லாகூர்)

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் சொகைப் அக்தர் சேர்க்கப்படுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சமீபத்தில் நடந்த இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் மற்றும் ஒருநாள் கிரிக்கெட் தொடரைப் பாகிஸ்தான் இழந்தது.

இந்தியாவுக்கு எதிரான கடைசி டெஸ்டில் பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் சொகைப் அக்தர் காயம் காரணமாகப் பாதியில் விலகினார்.

இதனால், எழுந்த சர்ச்சையில் வீரர்களுக்கு ஏற்பட்ட காயம் உண்மைதானா? என்பதைக் கண்டறிய மருத்துவக்குழு விசாரணை நடத்தப்பட்டது. அக்தரைப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் நேரில் அழைத்துக் கண்டித்தார்.

இந்த நிலையில், இலங்கையில் அடுத்த மாதம் நடைபெறும் ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் சொகைப் அக்தர் இடம்பெற மாட்டார் என்று பாகிஸ்தான் அணித் தேர்வுக்குழுத் தலைவர் வாசிம் பாரி அறிவித்து இருந்தார்.

போதிய உடல் தகுதி இருப்பதாகவும், தன்னை அணியில் சேர்க்கவேண்டும் என்று இங்கிலாந்து கவுண்டி கிளப்பில் ஆடிவரும் சொகைப் அக்தர் கோரிக்கை விடுத்து இருந்தார்.

இந்தநிலையில் அக்தர் முழு உடல் தகுதியுடன் இருப்பதை நிரூபித்தால் அணியில் சேர்க்கப்படுவார் என்று பாகிஸ்தான் சபைத் தலைவர் ஷஹாரியார் கான் கூறியிருப்பதாகப் பாகிஸ்தான் பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளது.

இதனால், சொகைப் அக்தர் ஆசியக் கிண்ணப் போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் இடம்பெறுவார் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்து உள்ளது.

### பல்கலைக்கழக விளையாட்டு அணி நடத்தும்

## கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யங்ஸ்ரார் சாதனை வெற்றி!

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் லீக் முறையில் நடத்திவரும் 30 ஓவர் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சுன்னாகம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது.

யாழ்.மாவட்டக் கழகக் கிரிக்கெட் வரலாற்றில் என்றும் இல்லாத வகையில் கொக்குவில் சி.சி.சி விளையாட்டுக்கழகம், பெற்ற 245 ஓட்டங்களை எதிர்கொண்டு ஆடி 246 ஓட்டங்களைப் பெற்று, இந்தப் போட்டியை வெற்றிபெற்று, சாதனை நிலைநாட்டியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இந்த விறுவிறுப்பான ஆட்டத்தின் ஸ்கோர் விபரம் வருமாறு-

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் சி.சி.சி விளையாட்டுக்கழகம், நிர்ணயிக்கப்பட்ட 30 ஓவர்களில் 245 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இதில் சபானாத் 64 ஓட்டங்களையும், சங்கர் 48 ஓட்டங்களையும், பிரதீபன் 46 ஓட்டங்களையும், துஷா 39 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 29.2 ஓவர்களில், 246 ஓட்டங்களைப் பெற்று போட்டியில் வெற்றிபெற்றது.

இதில் சுஜி 47 ஓட்டங்களையும், ராஜ் 40 ஓட்டங்களையும், கருணா, தினேஸ் ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 81,41 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

யாழ். மாவட்ட கழக 30 ஓவர் கிரிக்கெட் போட்டிகளில் சாதனை ஓட்டங்களைப் பெற்ற இப்போட்டியில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 7.4 ஓவர்களில் முதல் 100 ஓட்டங்களைப் பெற்றமையும் ஒரு சாதனைப் பதிவாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. (58)

### இங்கிலாந்துடனான டெஸ்ட்

## நியூஸிலாந்து அணி முதல் நாள் 295 ஓட்டங்களைக் குவித்தது!



(லண்டன்)

இங்கிலாந்து அணியுடனான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில் நியூசிலாந்து அணி 4 விக்கெட் இழப்புக்கு 295 ஓட்டங்களைப் பெற்றது.

மேற்படி இரு நாடுகளுக்கும் இடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் ட்ரெண்ட் பிறிஜ் மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

நியூஸிலாந்து அணி வீரர்கள் நிதானமாக நிலைத்து நின்று விளையாடியதால், இங்கிலாந்து அணிப் பந்துவீச்சாளர்களால் இலகுவாக விக்கெட்டுகளை வீழ்த்த முடியவில்லை.

ஆட்டம் ஆரம்பித்து சுமார் மூன்றரை மணி நேரம் கடந்த பின்னரே - நியூஸிலாந்து அணி 163 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது முதல் விக்கெட்டை வீழ்த்த முடிந்தது.

அணித்தலைவர் ஸ்ரீபன் பிளெமிங்குடன் ஜோடி சேர்ந்த ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களம் இறங்கிய றிச்சட்சன் 73 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார். 169 பந்துகளை எதிர்கொண்ட இவர், 11 பவுண்டரிகளை அடித்திருந்தார்.

அணித்தலைவர் ஸ்ரீபன் பிளெமிங் 198 பந்துகளில் 14 பவுண்டரிகள், 2 சிக்சர்களுடன் 117 ஓட்டங்களைப் பெற்றார். இது



இவர் பெற்ற ஏழாவது டெஸ்ட் சதம் ஆகும்.

அஸ்லே 15 ஓட்டங்களுடனும், மக்மிலன் ஓட்டம் எதுவுமின்றியும் ஆட்டமிழந்தனர்.

ஸ்ரைரிஸ் 68 ஓட்டங்களுடனும், ஓரம் 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். முதலாம் நாள் ஆட்ட நேர முடிவில் நியூஸிலாந்து அணி 4 விக்கெட்டுக்களை மட்டுமே இழந்து 295 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பந்து வீச்சில் ஹர்மிசன் 2 விக்கெட்டுக்களையும், பிளின்ரொப், ஜைல்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

## விம்பிள்டன் ரெனிஸ் முன்னணி வீரர் விலகல்

கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரெனிஸ் போட்டி 21ஆம் திகதி லண்டனில் தொடங்கவுள்ளது. இந்தப் போட்டியில் இருந்து முன்னணி வீரர்களில் ஒருவரான குயர்டன் (பிரேசில்) விலகியுள்ளார்.

காயம் காரணமாக அவர் 6 வார காலம் ஓய்வில் இருக்கவேண்டும். இதனால், விம்பிள்டனில் விளையாடவில்லை. குயர்டன் 3 முறை பிரெஞ் ஓபன் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னணி வீராங்கனைகளான ஹெனின், கிம்கிளிஸ்டர்ஸ் (பெல்ஜியம்) ஆகியோர் காயம் காரணமாக ஏற்கனவே விம்பிள்டனில் இருந்து விலகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

## அஸ்ரா கின்னஸப்போட்டி; இன்றைய ஆட்டங்கள்!

அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்டு வரும் பாடசாலை 16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் முதலாம் சுற்றில் இன்று காலை 9.30 மணிமுதல் நான்கு போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டித் தொடரில், பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மைதானத்தில், கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து - ஹாட்லிக் கல்லூரி மோதும் போட்டியும் -

யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில், சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து - சென்ஜோன்ஸ் கல்லூரி அணி மோதும் போட்டியும் -

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில், பெரிய புலம் மகாவித்தியாலயத்தை எதிர்த்து - கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி மோதும் போட்டியும் -

யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணியை எதிர்த்து - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதும் போட்டியும் நடைபெறவுள்ளன. (58)

# பொன் மொழிகள்

1. கால் தடக்கி விழுந்து விட்டால் கையின் உதவியால் எழும்பலாம். நாதடுக்கி விழுந்து விட்டால் விழுந்ததேதான்.
2. மற்றவர்களின் கடமையைச் சுட்டிக் காட்டுவதற்கு முன்பாகும் தம்முடைய கடமையைச் செய்து முடிக்க வேண்டும்.
3. ஒழுக்கம் பிச்சைக்காரன் உருவில் வந்தாலும், கௌரவிக்கப் படும்.
4. தூங்குகின்றவனை எழுப்புவதற்கு பொழுது இருமுறை விடிவதில்லை.
5. நன்மை செய்யப் பிறந்த நீ நன்மை செய்யா விட்டாலும், தீமையாவது செய்யாதிரு.

கோ. கோபால ரஞ்சினி
தரம் - 8
கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி.

# மூளைக்கு வேலை

## சென்றவார விடைகள்




# வார்த்தை விளையாட்டு




### இடமிருந்து வலம்

1. மாடு, மான் போன்ற விலங்குகள் தாம் உண்ட உணவை இரப்பை யிலிருந்து திரும்பவும் வாய்க்குள் கொண்டு வந்து மென்று விழுங்கு வது.
2. ஆடம்பரம் என்றும் சொல்லலாம்.
3. அளவுக்கு அதிகமாதல்.

### மேலிருந்து கீழ்

2. போட்டி என்பதன் இரட்டிப்பு.
4. உயர்ந்த மேடாக இருக்கும் நிலப்பகுதி.

# கரடிகள்



கரடிகளில் பனிக்கரடிகள், கறுப்புக் கரடிகள், பழுப்புக்கரடி கள், பண்டாக் கரடிகள் என்று பலவகை உண்டு. பொதுவாக சராசரி வெப்ப நிலையிலுள்ள வடக்குப் பகுதியில் வாழும் அவை, வட அமெரிக்கா, ஆசியா, ஐரோப்பா கண்டங்களில் காணப்படுகின்றன.



பனிக்கரடிகள், எட்டு முதல் பத்தடி உயரம் வரையும், கறுப்புக் கரடிகள் ஐந்தடி உயரமும், பண்டாக் கரடிகள் ஐந்து முதல் ஆறடி உயரம் வரையிலும் வளரக் கூடியவை. பனிக்கரடிகள் ஆட்டிக் பனிப் பிரதேசத்தில் வசிக்கும். வெள்ளையாக இருக்கும். இவை சிறப்பான நீச்சல் திறமை உடையவை. அறுபது மைல்கள் வரை ஓய்வு எடுக்காமல் நீந்தக் கூடியவை. நீச்சல் வேகம் மணிக்கு ஆறு மைல்.

பெரும்பாலும் அடர்ந்த காடுகளிலும், மலைப்பகுதிகளிலும் வாழும் கரடிகள் உயரமான இடத்தையே தங்குவதற்குத் தேர்ந்தெடுக்கும். மரக்கிளைகளின் உச்சியிலும் உறங்கும் வழக்கம் உடையவை. கரடிகளின் கண் பார்வை மிகவும் மங்கலானது. பெரும்பாலானவற்றுக்குக் காது மட்டுமே நன்றாகக் கேட்கும். இவற்றின் மோப்ப சக்தி மிகவும் அதிகம். குட்டிகள் முதல் ஒன் பது மாதங்கள் வரை தாய்பால் மட்டுமே குடித்து வளரும்.



தூங்கிக் கொண்டிருக்கும் போது, சிறு சலசலப்பு ஏற்பட்டா லும் விழித்துக் கொள்ளும். வரு டத்துக்கு ஆறு முதல் எட்டு மாதங்கள்வரை சாப்பிட்டுச் சேர்த்துவைத்திருக் கும். கொழுப்பு குளிர் காலத்தில் நீண்ட நேர உறக்கத்தின்போது, இவற்றுக்குப் பயன்படும். கரடிகளின் விருப்பம் மரக்கறி உணவுகள்தான். தேன், விதைகள், பழங்கள், புல்வேர் போன்றவற்றை உண்ணும். இவை கிடைக்காதபோது, மான்கள், ஆடுகள், பன்றிகள், எறும்பு, தேனீ, போன்றவற்றை உண்ணும். கரடிகள் தனிமை விரும்பிகள். பெண் கரடிகள் மட்டும் குட்டிகள் வளரும்வரை துணையாக இருக் கும். கரடிகளால் 35 மைல் வேகத்தில் ஓடமுடியும். குட்டிகளைக் காப்பாற்றவும், உணவுக்காகவும் மட்டுமே கரடிகள் சண்டையிடு கின்றன.

# பாரதியார்



பாட்டுக்கொரு புலவன் பாரதியடா - அவன்
பாட்டை பண்ணோடொருவன் பாடினானடா
கேட்டுக் கிறு கிறுத்துப் போனேனடா - அவன்
கிறுக்கில் உளரும் மொழி பொறுப்பாயடா.

தேனும் தினையும் பாலில் உண்ணலாமடா
தித்திக்கும் முக்கனியும் உண்ணலாமடா
கானக் குழுவிசையும் கேட்கலாமடா
உந்தன் கவி பாடுவதையும் கேட்கலாமடா.

உள்ளம் தெளியும் ஒரு பாட்டிலேயடா
மிக ஊக்கம் பிறக்கும் ஒரு பாட்டிலேயடா
கள் வெறி கொள்ளுமோர் பாட்டிலேயடா
மிக்க கண்ணீர் சிந்திடுமோர் பாட்டிலேயடா.

மா. நாகவதனி தரம் - 6 யா/வே/ம/உ/பாடசாலை.

இங்கே மடிக்கவும்



# சிவப்புக் கொண்டைச் சேவல்





சிந்தனைக்கு!
அன்புள்ளவர்களிடமே வாழ்வு உண்டு

# சிறுவர் அரங்கம்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

குழந்தை வாய்க்குள்ளாகத் தான் சிரித்தாள் மெதுவாக. ஆனாலும், கிழவியின் காதில் பட்டுவிட்டது.

அவள் அண்ணனையும், தங்கையையும் கண்டுகொண்டாள்.



"ஆகா! அகப்பட்டீர்களா! அன்றைக்கு என் பண்டங்களை எல்லாம் திருடிக் கொண்டு போனவர்கள். நீங்கள் தானே?" என்று இரைந்தாள்.

அண்ணனும், தங்கையும் குற்றுயிரும் குலை உயிருமாக நடுங்கிக் கொண்டு நின்றார்கள்.

கிழவி அடுப்பை மூட்டினாள்.

"இதோ உங்களை நெருப்பில் சுட்டுத் தின்றுவிடுகிறேன். டேய், பையா, கரண்டியில் உட்காரு, சீக்கிரம் உன்னை முதலில் இடுப்பில் செருகுகிறேன். என்றாள்

பையன் கால்களை முன்னால் நீட்டியபடி, கரண்டியில் உட்கார்ந்து அடுப்புச் சுவற்றில் ஊன்றிக் கொண்டான். கைகளையும் விரித்து, சுவற்றைப் பிடித்துக்கொண்டான், அவனை அடுப்புக்குள் செருகக் கிழவியால் முடியவே இல்லை.



"நீ சரியாய் உட்காரவில்லை! தலை முன்னால் இருக்கவேண்டும்' என்றாள்.

பையன் சொன்னான் -

பாட்டி நீ சொல்வது எனக்கு விளங்கவில்லை. நீயே கரண்டியில் உட்கார்ந்து காட்டு, அடுப்புக்குள் எப்படி நுழைவது என்று'

சூனியக்காரி - தலை அடுப்பின் பக்கம் இருக்கும்படி கரண்டியில் உட்கார்ந்து முதுகைக்கூட வளைத்துக்கொண்டாள். சிறுவன் தயங்காமல் அவளை அடுப்பில் செருகி விட்டான்!

அண்ணனும், தங்கையும் உயிர் தப்பினோம் என்று மகிழ்ந்தார்கள்.திரிகையை எடுத்துக்கொண்டு ஆகாயத்திலிருந்து தண்டு வழியே இறங்கி வீட்டை அடைந்தார்கள்.

திரிகையின் உதவியால், குழந்தைகளும் அவர்களுடைய சேவலும் வயிறார உண்டு வாழ்ந்து வந்தார்கள். அது விதம் விதமான பண்டங்களைப் செய்து தந்தது. அவர்கள் வேளைக்கு ஒருவகைப் பண்டங்களாக உண்டுகளித்தார்கள்.

இந்த அதிசயத் திரிகையைப் பற்றிய செய்தி அரசன் காதுக்கு எட்டியது. அவன் சேவகர்களை அனுப்பினான். அவர்கள் வந்து அனாதைக் குழந்தைகளின் திருகையை எடுத்துப்போய்விட்டார்கள்.

அண்ணனும், தங்கையும் தங்களிடம் மிஞ்சியிருந்த பண்டங்களை எல்லாம் தின்று தீர்த்துவிட்டார்கள். பின்னர் முன்போலவே பசியால் வாடினார்கள். தங்கை அழுதாள். அண்ணன் தேம்பினான். அவர்களுடைய அழுகை சேவலுக்குக் கேட்டது. அது வீட்டில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தது.

கொக்கரக் - கோ! இதோ போய் அரசனிடமிருந்து திரிகையை வாங்கி வருகிறேன்! என்று கொக்கரித்தது.

பின்பு அரசனிடம் போகப் புறப்பட்டது.

சேவல் நெடுந்தூரம் நடந்தது. வழியில் ஒரு கரடி எதிர்ப் பட்டது. எங்கே போகிறாய் என்று சேவலிடம் கேட்டது.

'அநாதைக் குழந்தைகளின் திரிகையை அரசன் பிடுங்கிக் கொண்டுவிட்டான். அதை வாங்கி வரப்போகிறேன் என்றது சேவல்.

என்னையும் அழைத்துக் கொண்டுபோ! என்றது கரடி.

என் வலது சிறகின் அடியில் ஏறிக்கொள்' என்று சொன்னது சேவல்.

கரடி சேவலின் வலது சிறகுக்கு அடியில் ஏறி உட்கார்ந்தது. சேவல் மேலே நடந்தது.

இன்னும் கொஞ்சத் தூரம் போனதும், ஒரு ஓநாய் எதிரே வந்தது.

'எங்கே போகிறாய், சேவல் அண்ணே? என்று கேட்டது.

'அநாதைக் குழந்தைகளின் திரிகையை அரசன் பிடுங்கிக் கொண்டு விட்டான். அதை வாங்கி வரப் போகிறேன்!



ஓநாய் சேவலின் இடது சிறகுக்கு அடியில் ஏறி உட்கார்ந்தது. சேவல் மேலே நடந்தது. கொஞ்சத் தூரம் நடந்த பின் ஒரு குளத்தைக் கண்டது.

'எங்கே போகிறாய் சேவல் மாமா? என்று கேட்டது குளம்.

அநாதைக் குழந்தைகளின் திரிகையை அரசன் பிடுங்கிக்கொண்டான். அதை வாங்கி வரப்போகிறேன்.

என்னையும் அழைத்துக் கொண்டு போ, சேவல் மாமா! என்றது குளம்.

நல்லது! என் தொண்டைப் பையில் உனக்கு இடம் போதும். என்று சொன்னது சேவல்.

குளத்தை முழுக்க குடித்துவிட்டு மேலே நடந்தது.

அரசன் மாளிகைக்கு வந்து, ஜன்னலுக்கு வெளியே நின்று கொண்டு பாடத்தொடங்கியது.

(தொடரும்...)

# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- சி.நிரோஜன்
கற்கும் பாடசாலை :-
யாழ்ப்பாணக் கல்லூரி
தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
முத்திரை சேகரித்தல்.
விளையாட்டு, கலைத்துறை.



முழுப்பெயர் :- க. கிருஷ்ணராஜ்
கற்கும் பாடசாலை :-
எழுவைதீவு முருகவேல் வித்தியாலயம்
தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல்,
தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர் :- லோ. பரிதா
கற்கும் பாடசாலை :-
பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு,
பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர் :- யோ. கிருஷாலினி
கற்கும் பாடசாலை :-
யாழ். சரஸ்வதி மகளிர் வித்தியாலயம்
தரம் :- 1
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு,
தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர் :- ம. மதிவதனி
கற்கும் பாடசாலை :-
யாழ். தாமோதர வித்தியாலயம்
தரம் :- 1
ஆர்வமுள்ள துறைகள் :-
புத்தகம் வாசித்தல்,
ஓவியம் வரைதல்.

முழுப்பெயர் :- பா. சுமந்தன்
கற்கும் பாடசாலை :-
யாழ். விக்னேஸ்வராக் கல்லூரி
தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
துடுப்பாட்டம்,
பாடம் படித்தல்.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா? அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

'இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இளந்தேனீக்கள் கழகம்**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :.....................................
கற்கும் பாடசாலை :.....................................
கற்கும் தரம் :.....................................
வீட்டு முகவரி :.....................................
பிறந்த திகதி :.....................................
ஆர்வமுள்ள துறைகள் :.....................................
.....................................

............... ...............
திகதி ஒப்பம்

............... ...............
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## சித்திரக் கதை – இன்பமான பயணம்



இங்கே மடிக்கவும்



## அன்புள்ள சிறுவர்களே!

கடந்தவாரம் எவ்வாறு சிறப்பாகக் கற்பது, சுலபமாகப் பரீட்சைக்கு முகங்கொடுப்பது என்பதைப் பற்றி வரும் வாரங்களில்பார்ப்போம் என்று எழுதியிருந்தேன். அதன் தொடர்ச்சியாக கல்வி கற்பதில் நீங்கள் எதிர்நோக்கும் பொதுவான பிரச்சினைகள் பற்றி முதலில் பார்ப்போம்.

நீங்கள் வசிக்கும் இடங்களைப் பொறுத்து இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று கிராமப்புறச் சூழ்நிலை. மற்றையது நகரப்புறச் சூழ்நிலையில் வசிப்பவர்கள். கிராமப்புறப் பாடசாலையில் பயிலும் மாணவர்கள் பல அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பீர்கள் என்பது உண்மையே. ஆனால், பல நன்மைகளும் உங்களுக்கு உண்டு என்பதை மறந்துவிடாதீர்கள்.



தொலைக்காட்சி, சினிமா ஒலிபெருக்கிகளின் சத்தங்கள்- என்று, பல்வேறுபட்ட பொழுதுபோக்குகள் நகரப் பாடசாலை மாணவர்களைப் பாதிக்கக்கூடியது. அதேநேரம் மனதை ஒருமுகப்படுத்திக் கற்பதற்கு உகந்த அமைதியான சூழ்நிலையைக் கிராமங்கள் கொண்டுள்ளன. நகரப்புற மாணவர்களுக்கு பல வசதி வாய்ப்புக்கள் இருந்த போதிலும், அவர்களின் கவனத்தைத் திசைதிருப்பக் கூடிய அம்சங்களே அதிகம்.

இதனைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு அடுத்தாக உங்களுடன் தொடர்புடைய விடயங்கள் பற்றி வரும் வாரம் பார்ப்போம்.

பாசமுடன் - சாரு அக்கா

## விடுகதையும் விடைகளும்

1. காட்டிலும், மேட்டிலும் முளைக்காத பனை என்ன பனை?
2. விண்ணில் ஆடிக் கண்ணைப் பறிப்பாள். அவள் யார்?
3. கறுத்தக் காட்டில் கட்டாக் காலி மாடுகள் அது என்ன?
4. காலை மாலை சிவக்குது, காலமெல்லாம் மிதக்குது அது என்ன?

### விடைகள்

1. கற்பனை.
2. மின்னல்.
3. பேன்.
4. சூரியன்.



இ. இளம்தீபன்,
தரம் - 5
இந்து ஆரம்பப் பாடசாலை.

## சிரித்து மகிழ ஜோக்ஸ்

### 01) கதவைத் திறக்கவா டொக்டர்

ஒருவர் :- ஓடி வந்த ஒருவர் "டொக்டர்! கெதியா வாங்கோ."
டாக்டர் :- "என்ன நடந்தது?"
ஒருவர் :- "எங்கட வீட்டுக்கதவைத் திறக்க முடியேல்லை டொக்டர் நீங்கவந்து உதவி செய்யுங்கோ"
டாக்டர் :- "கதவைத் திறப்பது டொக்டர் வேலை இல்லையே"
ஒருவர் :- "டொக்டர் அது உங்கட வேலைதான். வீட்டுச்சாவியை குழந்தை விழுங்கிட்டுது"

### 02) பஞ்சு வைத்துத் தைத்தால்

ஒருவர் :- "எனக்கு வயிற்றில் ஒப்பிரேசன் நடந்தது. டொக்டர் தவறுதலாக என் வயிற்றுக்குள் பஞ்சு வைத்துத் தைத்து விட்டார்?"
டாக்டர் :- "ஐயோ! இப்பொழுது உங்களுக்கு வயிறு மிகவும் வலிக்கிறதா"
ஒருவர் :- "இல்லை அடிக்கடி தாகம் எடுக்கிறது"

*சி.மினோசன் தரம் - 9, புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்.*

## எனக்குச் சிறகிருந்தால்

விண்ணை முட்டும் மேகங்கள் மெல்லப் பறந்து தொட்டுவர என் மேலெழுந்து பறக்கும் பறவைகளைக் கண்டால் எனக்குள் ஒரு ஏக்கம். எனக்கும் சிறகிருந்தால் ஆஹா...! நினைக்கவே எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது. எண்ணிப் பார்க்கிறேன். எனக்கும் சிறகிருந்தால்....!

சிறகுகளை விரித்துச் சுதந்திரமாக மேலெழுந்து வானத்தில் வட்டமடிப்பேன். கரையும் காக்கையுடனும், கூவும் குயில்களுடனும், குறுகுறுக்கும் புறாக்களுடனும் கை கோர்த்துக் கரையில்லா வானவெளியில் நீந்திவருவேன். எண்ணற்ற விண்மீன்கள் ஒவ்வொன்றின் அருகிலும், ஓய்வெடுத்துக்கொள்வேன். நீல வானில் நீந்திவரும் வண்ண நிலவின் அருகில் சென்று அதன் தண்ணீரில் குளிர்வேன்.

எழில் கொஞ்சும் மலையகத்தை சுற்றிப் பார்க்க வேண்டும் என்று எனக்கு நீண்ட நாள் ஆசை. இயற்கை அன்னையின் எழில் காணப்பறந்து சென்று விடுவேன். ஒரு விடுமுறையை அந்த மலையகத்தில் மகிழ்வோடு கழிப்பேன். மலைச் சிகரங்களுக்கிடையே பறந்து திரிந்து என் விருப்பப்படி பாடித்திரிவேன். பச்சைப்பசேலென்ற கம்பளம் விரித்தது போன்ற, புல்வெளிகளில் மெல்லத் தரையிறங்கி இளைப்பாறுவேன்.

மா மரங்களின் தனி நிறைக் கிளைகளில் பழங்களை இனம் கண்டு உண்ணுவேன். தேன் சொரியும் மலர்களில் அமர்ந்து தேன் அருந்துவேன். ஊர்க்கோடியில் இருக்கும் வயது முதிர்ந்த அந்தப் பாட்டிக்கு பழங்கள் பறித்து தினமும் கொடுப்பேன். அந்தப்பாட்டி உண்ணும்போது மனம் நிறைவேன்.

இவ்வளவா? இன்னும் எவ்வளவோ! எதற்கும் சிறகு வேண்டுமே.....?

**வே. பார்த்தீபன் தரம் - 8 பளை மத்திய கல்லூரி.**

## உங்கள் கைவண்ணம்




ம. பகீதன்
தரம் - 9 - கொக்குவில் இந்துக்கல்லூரி.



ராமேஸ்வர்
தரம் - 4.

## பாட்டு

ஐந்தினிலே ஒன்று போனால்
கட்டில் கால்கள் நான்கு.
நான்கினிலே ஒன்று போனால்
தேங்காய் கண்கள் மூன்று.
மூன்றினிலே ஒன்று போனால்
கோழி கால்கள் இரண்டு.
இரண்டினிலே ஒன்று போனால்
சோடா போத்தல் ஒன்று.
ஒன்றினிலே ஒன்று போனால்
ஒன்றும் இல்லை அப்பா.

*சந்தான குமார சர்மா - சக்தி தாரணி*
*இந்து இளைஞர் மன்ற பாலர் பாடசாலை. உடுவில்.*

# தனியார் பாடசாலை ஆசிரியர்களுக்கும் சம்பள உயர்வுகள் வழங்க அங்கீகாரம்

தனியார் பாடசாலை ஆசிரியர்களுக்கும், இலங்கை ஆசிரிய சேவைக்கான சம்பளம் வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

யாழ். மாவட்டம் உட்பட நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் இயங்கி வரும் தனியார் பாடசாலைகளில் சேவை புரியும் ஆசிரியர்களுக்கும், இலங்கை ஆசிரிய சேவைக்கான சம்பளத் திட்டத்தின் அடிப்படையில் பதவி உயர்வுகளும், வகுப்பு மற்றும் தரங்களுக்கான மாற்றங்களும் மேற்கொள்ளப்படவேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், உட்பட பல்வேறு ஆசிரியர் தொழிற்சங்கங்கள் அரசாங்கத்தை கோரிவந்தன. இந்த நிலையில் அண்மையில் அமைச்சரவை இந்தக் கோரிக்கையை ஏற்று அதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை அங்கீகாரத்தின்படி - தனியார் பாடசாலை ஆசிரியர்கள் ஏனைய அரசாங்கப்பாடசாலை ஆசிரியர்கள் போன்று, 06.10.1994 முதல் இலங்கை ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்பட்டு, 2001/14 மற்றும், 2004/01 இலக்க சுற்றறிக்கைகளின்படி தமது சேவைமூப்பு, கல்வித் தகைமை, தொழிற்தகைமைகளின்படி இலங்கை ஆசிரிய சேவையின் உரிய வகுப்புகளுக்கும், தரங்களுக்கும் பதவி உயர்த்தப்படுவர். இதன்படி இந்த ஆசிரியர்கள் அனைவரும் புதிய பதவியுயர்வுகளைப் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

புதிய தீர்மானத்தின்படி யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் பாடசாலைகளான சென். ஜோன்ஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, சுண்டிக்குழி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, கைதடி நவீல்ட் பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த ஆசிரியர்களும், அதிபர்களும் நன்மையடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தனியார் பாடசாலை ஆசிரியர்கள் இலங்கை ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்பட வேண்டும் என்ற கருத்தை மிக நீண்ட காலமாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வலியுறுத்தி வந்துள்ளது. (10)

### புனரமைப்புச் செய்யப்படவுள்ள

# கிராமங்களைத் தெரிவு செய்வதற்கான கலந்துரையாடல் இன்று செயலகத்தில்

நியாப் திட்டம் IIஇன் கீழ் புனரமைப்புச் செய்யப்படவுள்ள கிராமங்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசாமி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்திலுள்ள முழுக்கிராமங்களிலும் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்திப் பணிகள் மற்றும் புனர்வாழ்வுப் பணிகள் பற்றி ஆலோசிக்கப்படவுள்ளன.

மிக முக்கியமாக யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் நியாப் திட்டம் II இன் கீழான அபிவிருத்திப்பணிகளுள் பிரதேச ரீதியாகவும், கிராமத்தின் வளம், பின்தங்கிய நிலைமை தொடர்பாகவும், அவற்றிற்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்தி மேற்கொள்வது பற்றியும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தின் கிராம அபிவிருத்தியை முதன்மைப்படுத்துவதனூடாக மக்களின் தன்னிறைவான வாழ்வை உறுதிசெய்ய முடியும் என்ற அடிப்படையிலேயே நியாப் திட்டம் II நடைமுறைப்படுத்தப் படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நெடுந்தீவு அஞ்சலக கட்டடத்தில் கடற்படையினர் முகாம் அமைப்பு

நெடுந்தீவுப் பகுதியிலுள்ள அஞ்சல் அலுவலகக் கட்டடத்தில் இராணுவ முகாம் அமைக்கும் பணியில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை கொழும்பிலிருந்து வந்த கடற்படை அதிகாரிகள் நெடுந்தீவு அஞ்சல் அலுவலகத்துக்கு அருகிலுள்ள அஞ்சலகக் கட்டடத்தில் முகாம் அமைக்கப் போவதாக அஞ்சல் அதிபரிடம் தெரிவித்தனர்.

மேலதிகாரிகளின் அனுமதியின்றி முகாம் அமைக்கமுடியாது என்று அஞ்சல் அதிபர் தெரிவித்தபோதும், தாம் முகாம் அமைப்பதற்கான அனுமதியை கொழும்பிலுள்ள அதிகாரிகளிடமிருந்து பெற்றுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

எனினும், இதற்கு மறுப்புத் தெரிவித்த அஞ்சல் அதிபர் இது குறித்து உடனடியாக மேலதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

## பொது நூலகங்களின் விபரங்கள் கோரப்பட்டுள்ளன

(சுதுமலை)

உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகத்திலுள்ள பொது நூலகங்களை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மாகாண உள்ளூராட்சி உதவிப்பணிப்பாளர் பொ.ஜெகதீஸ்வரன் மேற்கொண்டுள்ளார்.

பொது நூலகம், நூலக ஆலோசனைக்குழு விபரம், வாசகர் வட்டம் தொடர்பான விபரங்கள், நூலகர் தொடர்பான விபரங்களை உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாக வடக்கு கிழக்கு உள்ளூராட்சி திணைக்களத்துக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (91)

# வேலை வாய்ப்பிற்கு விண்ணப்பம் கோரல்

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் நிலவளவையும், காணி அளவீடும் தொடர்பான பயிற்சி நெறிகளைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளதால் அவர்களை உடன்தொடர்பு கொள்ளுமாறு யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் என்.யோகராஜன் தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்ட பாடநெறிகளைப் பூர்த்திசெய்து அதற்கான சான்றிதழ்களை வைத்திருப்போரை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் அதிபர், யாழ். தொழில்நுட்பக்கல்லூரி என்னும் முகவரிக்கு சுயவிபரக் கோவை அடங்கிய விண்ணப்பத்தினையும் இணைத்து அனுப்புமாறு கேட்டுள்ளார்.

இதேவேளை, வீட்டுமின் இணைப்புப் பாடநெறியைப் பூர்த்தி செய்து இரண்டு வருடங்களாகியும், சித்தியடைந்த மாணவர்களுக்கு அனுப்பி வைக்கப்படவிருந்த சான்றிதழ்கள் மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சினால், யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதால், அவற்றை மாணவர்கள் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ப)

# பொலிஸாரின் சைக்கிளை திருடியவர் மாட்டினார்

யாழ். நகரப் பகுதியில் பொலிஸாரின் சைக்கிள் ஒன்றைத் திருட முற்பட்ட ஒருவர் பொலிஸாரிடம் வகையாக மாட்டிக்கொண்டார்.

நேற்றுமுன்தினம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக இந்த சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக, மேலும் தெரியவருவதாவது-

யாழ். நகரப் பகுதியிலுள்ள வங்கி ஒன்றுக்கு பொலிஸார் ஒருவர் சாதாரண உடையுடன் சென்றார். இவர் சைக்கிளை பூட்டாமல் விட்டுச்சென்றபோது, அந்தச் சைக்கிளை திருட முற்பட்ட நபரே பொலிஸாரிடம் அகப்பட்டுக் கொண்டார்.

இதனை அடுத்து இந்த நபரை சந்தேகத்தின் பெயரில் குற்றத் தடுப்பு பொலிஸார் தடுத்து வைத்துள்ளனர்.

யாழ். நகரப் பகுதிகளில் அண்மைக் காலமாக சைக்கிள், மோட்டார் சைக்கிள் திருட்டு சம்பவங்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முழுநாள் கருத்தரங்கு

சாட்டி சித்தாத்திரை மாதா கோவிலில் சிறுவர் உரிமைகள் தொடர்பான நாடக ஆற்றுகையும், முழுநாள் கருத்தரங்கும் இடம்பெறவுள்ளது.

இன்று காலை தாவடி சமாதானக் குழு உறுப்பினர்கள் திருமறைக் கலாமன்றத்தினருடன் இணைந்து, மேற்கொள்ளவுள்ள இந்த நிகழ்வை கியூடெக் நிறுவன சமாதானக் குழுவினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

நாடக ஆற்றுகையிலும், முழுநாள் கருத்தரங்கிலும் சிறுவர் உரிமை, அவர்களுக்கான பாதுகாப்பு, தலைமைத்துவம் தொடர்பான நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாக சமாதானக் குழுவைச் சேர்ந்த யூஜின் தெரிவித்தார். (91)

# சட்டவிரோதமாக மின் பெற்றோருக்கு 55 ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு!

(யாழ்பாணம்)

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றவர்களுக்கு 55 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜாவால் இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 11 பேர் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றதாக கோப்பாய் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதனை விசாரித்த நீதிவான் இவர்களைத் தலா 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்டிருந்தார்.

இதன்படி - அவர்கள் ரூபா 55 ஆயிரம் நீதிமன்றில் செலுத்தியுள்ளார்கள். இத்தகைய சட்டவிரோத செயல்களில் இனிமேல் ஈடுபடக்கூடாது என நீதிபதியால் அவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. (ப)

# சனசமூக நிலைய சமாச புதிய நிர்வாகசபை தெரிவு

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின், சமாசத்தின் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் சமாசத்தின் 2004ஆம் ஆண்டுக்கான தலைவராக, ஜனசக்தி சனசமூகநிலையத்தைச் சேர்ந்த எஸ். ரவீந்திரபாபு தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

செயலாளராகக் கண்ணபுரம் சனசமூக நிலையத்தைச் சேர்ந்த கே.பிரபாகரனும் பொருளாளராக கே. நாகேந்திரமும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

இவர்களைவிட உபதலைவர், உபசெயலாளர் உட்பட்ட 10 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் யாழ். மாநகர சபை ஆணையாளர் இ.இராமலிங்கம் தலைமையில் இடம்பெற்ற சனசமூக நிலையங்களின் சமாசப் பொதுக் கூட்டத்திலேயே இந்தத் தெரிவுகள் இடம்பெற்றன.




மண்டைதீவு கடற்பரப்பில் படுகொலை செய்யப்பட்ட பொது மக்களின் 18ஆம் ஆண்டு நினைவு நிகழ்வில் தேசியக் கொடியை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான கபிலன் ஏற்றி வைப்பதையும் - நிகழ்வில் கலந்துகொண்டோர் மௌன அஞ்சலி செலுத்துவதையும் - குருநகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியையும் படங்களில் காணலாம்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்



பெயர் : தெ. துஷாளினி
முகவரி : வட்டுக்கோட்டை

இரண்டாவது அகவையில்



பெயர் : இ. சதுஸ்னவி
முகவரி : கந்தர்மடம்.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :

முகவரி :

பிறந்த ஆண்டு:

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன

பெற்றோர் ஒப்பம்

ஓர் அரிய சந்திப்பு

எஸ்.எம்.ஜி.

# தமிழினத்தின் தலைவனிடம் விருது பெற்றேன்

நிமிர்ந்த நன்னடை,
நேர்கொண்ட பார்வை,
உறுதிபடைத்த நெஞ்சம்,
அடக்கமான பேச்சு,
பணிவான வரவேற்பு,
பண்பான உபசாரம்,
உள்ளூர் பிரச்சினைகள் முதல்
உலகப்பிரச்சினைகள் வரை
தெளிந்த ஞானம்
தமிழ்த் தேசியத்தில்
அளவுகடந்த அக்கறை
புதிய சமுதாயத்தின் புதிய
வளர்ச்சியில் அதீத ஆர்வம்.

இத்தனை பண்புகளையும் தன்னகத்தே கொண்ட மொத்த உருவமாக தமிழினத்தின் தேசியத்தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களைக் கண்டேன். களி கொண்டேன்.

50 ஆண்டுகளுக்கு மேலாக பத்திரிகைகளில் பணியாற்றிவந்திருக்கும் நான் பல அரசியல் தலைவர்களையும் சந்தித்திருக்கிறேன். சில போராளிகளையும் அவற்றின் தலைவர்களையும் பார்த்திருக்கிறேன்.

தந்தை செல்வா தலைமை தாங்கி நடத்திய சாத்வீகப் போராட்டம் பலவற்றிலும் உள் நுழைந்து மக்களுக்குச் செய்திகளையும் கட்டுரைகளையும் எழுதிக்கொடுத்து அந்தப் போராட்டங்களுக்கு உத்வேகம் கொடுத்திருக்கின்றேன். 1956 ஆம் ஆண்டில் வீரகேசரிப் பத்திரிகையின் நோக்கில் மாற்றம் ஏற்படுத்தியதிலும் எனக்குப் பெரும் பங்குண்டு.

சாத்வீகப் போராட்டம் சிங்களவர் முன் வெற்றி காண முடியாது என்று தமிழரசுக்கட்சிக்குள்ளேயே இளைஞர்கள் குரல் எழுப்பினார்கள். சமஷ்டியும் சரிவராது. சாத்வீகமும் வெற்றி பெறாது. தனியரசும் ஆயுதப்போராட்டமுமே தமிழன் தலைநிமிர்ந்து வாழ வழிவகுக்கும் என்று அவர்கள் எடுத்துக் கூறினர்.

"வாள் எடுத்தவன் வாளால் மடிவான்" என்றுஇதற்குப் பதிலளித்த தந்தை செல்வா ஆயுதப்போராட்டமும் தனியரசுக் கோரிக்கையும் தமிழ் இனத்தின் அழிவுக்கே இலங்கையில் வழிவகுக்கும் என்று அக்கோரிக்கையை மறுத்தார்.

1960 ஆம் ஆண்டில் அடங்காத் தமிழன் செ.சுந்தரலிங்கம் தனிஈழக்கோரிக்கையை முன்வைத்து, ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணி என்ற ஓர் அமைப்பை உருவாக்கினார். இம்முன்னணியின் சார்பில் சுந்தரலிங்கம் 1960 ஆம் ஆண்டில் மார்ச் மாதத்திலும், ஜூலை மாதத்திலும் நடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்களில் வவுனியா தொகுதியில் போட்டியிட்டார். வேறு சில தொகுதிகளில் இந்த முன்னணி சார்பில் வேட்பாளர்களும் நிறுத்தப் பட்டனர்.

அடங்காத் தமிழனின் தனியரசுக்கோரிக்கையை தந்தை செல்வாவின் தமிழரசுக்கட்சி வன்மையாக எதிர்த்தது. இந்த எதிர்ப்புப் பிரச்சாரத்துக்கு அமிர்தலிங்கம் தலைமை தாங்கி சுந்தரலிங்கத்தின் தோல்விக்குக் காரணமாக இருந்தார்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் நாடாளுமன்றத்தில் நாற்காலிகளைப் பெறும் போராட்டங்களாகவே அமைந்தன. சமஷ்டி ஆட்சி அமைப்புக்கான சாத்வீகப் போராட்டங்கள் தமிழினத்தையும் அவர்களின் பொருளாதாரத்தையும் அழித்து ஒழிப்பதற்கான வாய்ப்பாக சிங்களப் பேரினவாதிகளுக்கு வாய்த்தது.

இந்நிலையில்தான் தமிழ் இன அழிப்பை தடுத்து நிறுத்துவதற்கும் தமிழ் மக்கள் இலங்கையில் சுதந்திரமாக சம உரிமையுடன் அச்சமின்றி பாதுகாப்பாக வாழ்வதற்கும் ஆயுதமேந்திப் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று தமிழ் இளைஞர்கள் சிலர் துணிந்து முன்வந்தனர்.

இந்த இளைஞர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க முன்வந்த அயல்நாடு, இந்த இளைஞர்கள் ஒற்றுமையாக ஒரே அணியில் திரண்டு விடாமலும் பார்த்துக்கொண்டது.

உன்னத இலட்சியத்துக்காக ஆயுதம் ஏந்திய இளைஞர்கள்பலர் தமது சுயநல, சுகபோக வாழ்க்கையை மேலாகக்கருதி கட்டுக்கோப்பும் ஒழுங்கும் இல்லாத வாழ்க்கைக்கு வழி காட்டினர். இவர்கள் திசைமாறிச் சென்றனர். இதைச் சிங்களப் பேரினவாதம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டது. அயலகம் தனது ஆதிக்கத்தைச் செலுத்த முன்வந்தது.

இலங்கையில் தமிழ் மக்கள் பாதுகாப்பாகவும் அச்சமின்றியும் தங்கள் தாயக பூமியில் சுதந்திரமாக தங்களைத் தாங்களே நிர்வகித்துக்கொள்வதற்கு தமிழீழம் ஒன்றே ஒரேவழி என்பதை பிரபாகரன் உணர்ந்தார். இந்த இலட்சியத்தை அடைவதற்காக நெஞ்சுறுதியும் தியாக சிந்தையும் கொண்ட இளைஞர்களுடன் களம் இறங்கினார். சோதனைகள், தடைகள், அந்நியத் தலையீடுகள், உள்நாட்டு சதித்திட்டங்கள் எனப் பலவற்றையும் கடந்து இன்று உலக நாடுகள் பலவும் ஆதரவு தரும் நிலையை எட்டியிருக்கின்றார்.

உலகில் பல நாடுகள் விடுதலைப்போராட்டங்களில் கடும் சோதனைகளையும் வேதனைகளையும் சந்தித்திருக்கின்றன. விடுதலையடைந்த பல நாடுகளில் சிறிய இன குழுமங்கள், மதக் குழுமங்கள் என பல பிரிவுகள் தங்கள் விடுதலைக்காக போராடியிருக்கின்றனர். இன்னும் போராடிக்கொண்டிருக் கின்றன. இவைகளுக்கெல்லாம் பிற நாடுகளோ, பிற நாடுகளிலுள்ள குழுமங்களோ ஏதோ ஒரு வகையில் உதவி வருகின்றன.

ஆனால், பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு எந்த நாடோ எந்தக்குழுமமோ எந்த விதத்திலும் உதவ முன்வராதபடி இலங்கைப் பேரினவாதம் தனது சகல சக்திகளையும் பயன்படுத்தி தடுத்து வருகின்றது.

இலட்சிய வேட்கை, கொண்ட கொள்கையில் வெற்றி பெற்றே தீருவோம் என்ற அர்ப்பணிப்பும், மக்களைப் பாதுகாப்போம் என்ற நெஞ்சுறுதியும் போர் தந்திரமும், வீரமும் இன்று தமிழீழம் விடுதலையின் விளிம்பில் நிற்க காரணமாகிறது.

போர்க்களத்தில் வெற்றியீட்ட முடியாத சக்திகள் குள்ளநரித்தந்திரங்கள் மூலம் தமிழீழத்தில் குழப்பங்களையும் பிளவினைகளையும் ஏற்படுத்துவதற்கு பல்வகை முயற்சிகளை சலிக்காது செய்து கொண்டே இருக்கின்றன.

தலைவர் பிரபாகரன் தலைமையில் தமிழ் மக்கள் விடுதலை பெறுவது உறுதி என்ற நிலை உலக நாடுகள் பலவற்றுக்கும் தெரிந்திருக்கிறது. உலக நாட்டுத் தலைவர்களின் பிரதிநிதிகள், ராஜதந்திரிகள், வெளிநாட்டு அமைச்சர்கள் தலைவரைப் பார்க்க வருகிறார்கள். அரசுத் தலைவர்களை சந்திக்கிறார்கள்.

அடுத்து வன்னிக்குத் தான் வருகிறார்கள். தமிழீழ விடுதலைப்புலிகளின் பொறுப்பாளர்களைச் சந்தித்துப் பேசுகிறார்கள். சில முக்கிய விஷயங்கள் பற்றியும் பேசுகிறார்கள். தேசியத்தலைவர் பிரபாகரன் தேவையான சந்தர்ப்பத்தில் முக்கியமான தலைவர்களைச் சந்தித்துப் பேசுகிறார்.

இப்போதே தமிழீழ அரசு இயங்குவது போலவும் வெளிநாட்டுப் பிரமுகர்களும் ராஜதந்திரிகளும் தமிழீழத்துக்கு வந்து செல்வது போலவும் கருதப்படுகிறது.

தனி அரசும் ஆயுதப் போராட்டமும் இலங்கையில் தமிழ் இனத்தின் அழிவுக்கு வழிவகுக்கும் என்று அஞ்சிய தந்தை செல்வா தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராட முன்வந்ததைத் தடுக்க முனையவில்லை. இதேசமயம் வட்டுக்கோட்டை, பண்ணாகத்தில் கூடிய மகாநாட்டில், "இழந்த தமிழ் அரசை மீண்டும் அமைப்போம்" என்று தீர்மானம் நிறைவேற்றி தனியரசு அமைப்பதற்கு தந்தை செல்வா தலைமைதாங்கினார். நாடாளுமன்றத்தில் கூட தனியார் பிரேரணையாக " இழந்த தமிழரசை மீண்டும் தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் அமைப்பதற்கு ஒரு பிரேரணையும் 1976 இன் இறுதிப்பகுதியில் நாடாளு மன்றத்தில் கொண்டு வருவதற்கு முன்னறிவித்தல் கொடுக கப்பட்டது." அது ஒழுங்குப் பத்திரத்திலும் இடம்பெற்றது. வழமைபோல் அது நாட்கள் கடத்தப்பட்டு, நாடாளுமனறம் கலைக்கப்பட்டதுடன் காலாவதியானது.

இதன்படி தந்தை செல்வா கடைசிக்காலத்தில் ஆயுதப் போராட்டத்தையும் தமிழ் மக்களுக்கு தனியரசு அமைவதையும் ஏற்றுக் கொண்டார் என்றே சொல்லவேண்டும்.

சாத்வீகப் போராட்டத்தில் சிங்களப் பேரின வாதிகளால் தமிழ் இனத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு ஆயுதப் போராட்டத்தினால் தடுத்து நிறுத்தப்பட்டது.

இலங்கையில் தமிழ் இனத்தை அழிவிலிருந்து தடுத்துக் காப்பாற்றவும் இன்றுவரை சிங்களப் பேரினவாதம் தமிழ் இன அழிப்பை மேற்கொள்ள முடியாமல் பலவீனப்பட்டு நிற்பதற்கும் தேசியத்தலைவர் பிரபாகரனே காரணம் என்பதைத் தமிழினம் நன்கு அறியும்.

தமிழ் இளைஞர்களை ஒன்று திரட்டி மறவர் படைக்கு தலை மைதாங்கும் தேசியத் தலைவர் பிரபாகரன் அரசியலிலும் தமிழீழத்தில் ஒற்றுமையையும் தனது தலைமையின் கீழ்ஏற்படுத்தி இருக்கிறார்.

தமிழீழத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் கல்வி வளர்ச்சிக்கும் தொழில் வாய்ப்புக்களுககும் தகுதி வாய்ந்தவர்களைக் கொண்டு திட்டங்கள் தீட்டிச் செயற்படுத்தி வருகிறார்கள்.

தரைப்படை, கடற்படை இன்று விமானப் படை என்றும் வெளிநாட்டு நிபுணர்கள் தான் வியப்புடன் பேசுகிறார்கள்.

இத்தனை வலிமை பொருந்திய தமிழீழத் தேசியத்தலைவரை தமிழர் கூட்டணியின் மறைந்த தலைவர் எம்.சிவசிதம்பரம் கடைசி நேரத்தில் பாராட்டினார். பிரபாகரனே தமிழ் மக்களின் தலைவர். வழிகாட்டி என்று அவர் சொன்னார். அத்தகைய தமிழர் தலைவரை பார்க்க ஆசைப்பட்டேன்.

இந்நிலையில் தான் தமிழ் இனத்தின் ஒப்பற்ற தலைவனைச் சந்திக்க, தரிசிக்க ஆவல் கொண்டேன். 50 ஆண்டுகளைப் பத்திரிகைப் பணியில் செலவிட்டு இப்போது வாழ்வில் முக்கால் நூற்றாண்டை எட்டிப்பிடித்துக்கொண்டிருக்கும் நான் தமிழீழ விடுதலையை, அதிகார பூர்வ நிகழ்ச்சிகளைக் கண்டு, மகிழும் வாய்ப்பைப் பெறமாட்டேனோ என்ற ஐயம் என்மனதில் ஏற்பட்டது. எனது இந்த ஐயத்தையும் அச்சத்தையும் என்மீது அன்பும் அக்கறையும் கொண்ட அன்புப்புலிகள் சிலரிடம் தெரிவித்தேன். நீங்கள் எங்களுடன் நீண்ட காலம் இருக்கத்தான் போகிறீர்கள் என்று எனக்கு அவர்கள் ஆறுதல் சொன்னார்கள்.

நான் போய்ச் சேருவது பற்றி எப்போதுமே கவலைப்படுவதில்லை. வந்தேன் இருந்தேன் செத்தேன் என்றில்லாமல் ஏதாவது செய்தேன் என்ற திருப்தியுடன் விடுதலையைக் காண வேண்டும். அதற்குமுன் தேசியத்தலைவரைப் பார்க்கவேண்டும் என்றேன்.

அமரர் நடேசனின் புகழ் உடம்புடன் வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வந்தேன். கிளிநொச்சியில் நடேசனுக்கு அஞ்சலி செலுத்த வந்த அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் என்னைப் பார்த்ததும் பிற்பகலில் சந்திக்கவேண்டும் என்றார்.

அன்று மாலையில் அவரைச் சந்தித்தேன். பத்திரிகைப் பணிகள் பற்றி பேசியபின் நான் நிறைய எழுத வேண்டும் என்று கூறினார். நூல்கள் வெளியிட வேண்டும் என்றும் சகல உதவிகளையும் செய்வதாகவும் தமிழ்ச் செல்வன் சொன்னார். சந்திப்பின் நினைவாக ஒரு வெள்ளிப்பேனாவும் அன்பளிப்புச் செய்தார்.

தமிழ்ச்செல்வனிடம் தேசியத்தலைவரைச் சந்திக்கவேண்டும் என்ற எனது ஆவலைச் சொன்னேன்.

நிற்கச் சொன்னார். இது உடன் நிறைவேறக் கூடிய விஷயம் அல்ல என்று நினைத்து நான் மறுநாள் யாழ்ப்பாணம் சென்றேன். அன்று மாலையே உடன்வருமாறு தமிழ்ச்செல்வனிடமிருந்துஅழைப்பு வந்தது.

மறு நாள் காலை புறப்பட்டு முற்பகல் கிளிநொச்சி வந்தேன். தயாமாஸ்டரிடம் போனேன். காலை 11 மணிக்குத் தயாராக நிற்குமாறு சொன்னார். சிறிது நேரம் கழித்து வாகனம் ஒன்று வந்தது ஏறிச் சென்றேன்.

வெளிவாசலைத் தாண்டி உள்ளே சென்றேன். உள்வாசலுக்கு வெளியே தமிழ்ச்செல்வன் நின்று வரவேற்று என்னை உள்ளே அழைத்துச் சென்றார்.

உட்கதவைத் தாண்டியதும் அதிக வெளிச்சம் இல்லை எனது கண்பார்வையும் சற்று மங்கல் சற்று நிமிர்ந்துபார்த்தேன் தேசியத் தலைவர் என்னை பார்த்த படியே நின்றார். நான் இரு கரம் கூப்பினேன் அவரும் கரம் கூப்பி வணக்கம் தெரிவித்து வாருங்கள் என்றார்.

நான் நெருங்கிச் சென்றேன். எதிரே இருந்த ஆசனத்தில் கையைக்காட்டி அமரும் படி சொன்னார் நான் அமர்ந்தேன். அதன் பின்னரே தலைவர் அமர்ந்தார். தமிழ்ச்செல்வனும் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரனும் அமர்ந்தனர்.

வெளிநாட்டுத் தலைவர்கள், பிரமுகர்கள், தூதுவர்கள், உள்நாட்டுப்பிரமுகர்கள் எனப்பலரும் தேசியத்தலைவரைச் சந்திக்கும் நோக்கத்துடன் வன்னிக்கு வருகிறார்கள். இவர்கள் எல்லோருக்குமே எல்லாநேரமும் தேசியத்தலைவரைச் சந்திக்கமுடிவதில்லை. சிலர் பலதடவைகள் சென்றும் சந்தித்ததில்லை.

ஐம்பதாண்டுகளுக்கு மேலாகப் பத்திரிகைப் பணி செய்தேன் என்பதைத்தவிர வேறு எந்தத் தகுதியும் எனக்கு இல்லை. எனக்கு ஆலவட்டம் எதுவும் கிடையாது. இப்பொழுது பத்திரிகைக்கு இடையிடையே கட்டுரைகள் எழுதுவதைத் தவிர எந்தப்பத்திரிகையிலும் நான் பணியாற்றவில்லை. பத்திரிகையாளர்களும் ஊடகவியலாளர்களும் அவர்களது சங்கங்களும் என்னை மறந்துவிட்டன.



ஒரு ஏழைப்பத்திரிகையாளனான என்னைச் சந்திப்பதற்கு மாபெரும் தமிழர் தலைவர் எனக்காக நேரம் ஒதுக்கி காத்திருக்கிறார் என்பதை நினைத்த போது எனது உடல் புல்லரித்தது. என்னை வரவேற்று அமரச் சொல்லி நான் அமர்ந்த பின் அவர் அமர்ந்ததும் அதைத் தொடர்ந்து மற்றவர்கள் அமர்ந்ததும் நான் என்ன செய்யவேண்டும் என்ன பேச வேண்டும் என்று எதுவும் தோன்றவில்லை. நான் சில நிமிடங்கள் பிரமித்திருந்தேன் என்பதே உண்மை.

"நான் இவரைப் படங்களில் பார்த்திருக்கிறேன்" என்று தலைவர் சொன்னார். ஜூனியர் விகடனில் ஈழமண்ணில் ஓர் இந்தியச் சிறை என்ற கட்டுரை வந்ததையும் நினைவூட்டினார். அதில் என் படங்கள் வெளிவந்திருந்தன.

தலைவருடன் நிறையப் பேச வேண்டும் என்று நினைத்துக் கற்பனை செய்திருந்தேன். தலைவரின் உபசரிப்பிலும் அவரது பண்பிலும் கட்டுண்டு முதலில் பார்த்ததும் எதையுமே பேச வாய் வரவில்லை.

தலைவரே பேசினார். வயதின் முதிர்ச்சி, நினைவாற்றல் குறைந்து வருவதுடன் கிரகிக்கும் தன்மை மறைந்து வருவதையும் அப்போது உணர்ந்தேன்.

இடையிடையே நானும் ஏதேதோ சொன்னேன். தலைவர் அமைதியாகக் கேட்டார்.

பத்திரிகைத்துறை பற்றி அவர் சில தெளிவான கருத்துக்களைச் சொன்னார். தமிழ்ச்செல்வனும் பத்திரிகைத்துறையில் சில மாற்றங்களை முன்னேற்றங்களைச் செய்ய வேண்டுமென்று சொன்னார்.

தமிழ்நாட்டிலிருந்து வரும் பத்திரிகைகளை நாங்கள் பின்பற்றுவதைத் தவிர்க்க வேண்டுமென்று தலைவரும் தமது கருத்தைச் சொன்னார்.

பத்திரிகையாளர்களைப் புதிதாகப் பயிற்றுவிக்க வேண்டுமென்று இப்பொழுதுள்ள பத்திரிகையாளர்களுக்கும் அனுபவமுள்ள நமது பத்திரிகையாளர்களைக் கொண்டு பயிற்சியளிக்க வேண்டுமென்றும் தமிழ்ச் செல்வன் ஒரு யோசனையைத் தெரிவித்து இதற்கென கிளிநொச்சியில் ஒரு பத்திரிகையாளர் பயிற்சி மன்றம் உருவாக்கப்படவேண்டும் என்றும் சொன்னார்.

இந்த யோசனையை வரவேற்ற தேசியத்தலைவர் இது நல்ல யோசனை நிமலராஜன் நடேசன் பெயரில் நிலையம் ஒன்றைத் தொடங்கி இந்தபத்திரிகையாளர் பயிற்சி மன்றத்தை நடத்தலாம் என்று தமிழ்ச்செல்வன் கூறிய யோசனையை உடன் செயல்படுத்தலாமென்றார்.

இந்த பத்திரிகையாளர் பயிற்சி மன்றநிதியத்திற்கு தாமே முதலில் ஒரு இலட்சம் ரூபாய் நிதி வழங்கி தொடங்குவதாகத் தேசியத் தலைவர் சொன்னதாகத் தமிழ்ச்செல்வனும் பாலகுமாரும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர் நானும் மகிழ்ச்சி தெரிவித்தேன்.

பத்திரிகையாளர் பயிற்சி மன்றத்திற்கு ஒரு கட்டடம் அமைத்து அதில் வாரத்தில் இரு தினங்கள் பயிற்சி பெறுபவர்களும் பயிற்றுவிப்பவர்களும் வந்து தங்கியிருந்து பணியை நன்கு செய்யலாம் என்றும் தலைவர் யோசனை சொன்னார்.

முதல்நாள் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்தபோதும் பத்திரிகையாளர் பயிற்சி மன்றம் ஒன்று அமைக்கப்படவேண்டியதன் அவசியத்தை அவர் சொல்லியிருந்தார். ஆற்றலும் அனுபவமுமுள்ள பத்திரிகையாளர்களை இதற்குப் பயன்படுத்தவேண்டும் என்று அவர் சொல்லியிருந்தார். நானும் இதில் பங்கேற்க வேண்டும் என்றும் சொன்னார்.

பத்திரிகையாளர் பயிற்சிமன்றத்திற்கு திரு. எஸ்.சிவநாயகத்தின் சேவையையும் பெற்றுக் கொள்ள தமிழ்ச்செல்வன் யோசனை சொன்னார்.

தேசியத்தலைவருடனான சந்திப்பின்போதும் இந்தப் பத்திரிகையாளர் பயிற்சி மன்றம் பற்றி தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டார்.

பத்திரிகைகளில் வரும் செய்திகள், கட்டுரைகள் பற்றியும், வானொலி, தொலைக்காட்சிகளில் வரும் நிகழ்ச்சிகள் ஒலி, ஒளிபரப்பாகும் பாடல்கள், காட்சிகள் பற்றியும் குறிப்பிட்ட தலைவர், மனிதனுக்கு "செக்ஸைத்" தவிர வேறு சிந்தனையே இல்லாத மாதிரி இவைகள் எடுத்துக்காட்டுகின்றன. 24 மணிநேரமும் இதுதான் வேலை என்று இவை அமைந்துவிடுகின்றன. ஒலி, ஒளிபரப்பாகும் பாடல்களைப் பாருங்கள். "சின்னவீடா வரட்டுமா, பெரியவீடா வரட்டுமா?" என்றும் ஒரு பாட்டு என்று சினம் கலந்த சிரிப்புடன் வெறுப்புடன் சொன்னார். "கலியாணம்தான் கட்டிக்கிட்டு ஓடிப்போகலாமா இல்லை ஓடிப்போய் கல்யாணம் தான் கட்டிக்கலாமா?" என்று ஒரு பாட்டு என்று நானும் சொன்னேன்.

இந்தக் கலாசாரக் கேடுகளைத் தடுக்கவேண்டும்தான் என்று தலைவர் யோசனையுடன் சொன்னார். ஈராக்கில் நடக்கும் சம்பவங்கள் பற்றியும் மத்திய கிழக்கு நிலைமை பற்றி யெல்லாம் கூட அவர் தனது கருத்தைத் தெரிவித்தார்.

சாதிப்பாகுப்பாட்டுப்பிரச்சினை, பிரதேச வேறுபாடு இவற்றை யார்? எதற்காக? எப்படியெல்லாம் செய்கிறார்கள் என்பதையும் சுருக்கமாக, ஆனால் தெளிவாகக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

அன்று காலையில் வந்த பத்திரிகையில் சூரிய நாராயணா என்ற ஆய்வாளர் புலிகளின் கடற்படைப்பலம் பற்றித் தெரிவித்திருந்த கருத்தைப் பற்றி நான் குறிப்பிட்டதும் அதைப்பார்த்தேன், படித்தேன் என்று தலைவர் சொன்னார். இதன் பின் எங்களைப் புகைப்படம் எடுப்பதற்கு படப்பிடிப்பாளர் வந்தார். நாங்கள் எழுந்ததும் அந்த மண்டபத்தின் கடைசியின் திரையில் முன் தலைவர் சென்று நின்றார். நானும் அவரைத் தொடர்ந்தேன். அப்பொழுதுதான் அவர் கையில அழகான நீலப்பெட்டி ஒன்றில் பளபளவென மின்னும் புலிச்சின்னம் என் கண்ணில்பட்டது.

இந்த விருது வழங்கும் திட்டம் எனக்குத் தெரியாது. சந்திப்புடன் எனது ஆவல் நிறைவடைந்து விடும் என்றுதான் நினைத்திருந்தேன். தலைவர் என்பக்கம் திரும்பிநின்று தங்கத்தாலான தேசியச் சின்னத்தை என் கைகளில் கொடுத்தார். புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. நான் நன்றி சொன்னேன். என் வாழ்வில் இதைவிட வேறு என்ன பரிசு இருக்கிறது, பாராட்டும் இருக்கப்போகிறது?

இனிநான் வெளியேபோகவேண்டியதுதான் என்று நினைத்துக்கொண்டேன். நாங்கள் சாப்பிடப்போவோம் என்று தலைவர் சொல்லிக் கொண்டே அடியெடுத்து வைத்தார். நானும் பின்தொடர்ந்தேன். தமிழ்ச்செல்வன், பாலகுமாரன் ஆகியோரும் தொடர்ந்தனர்.

அடுத்திருந்த சிறிய மண்டபத்திற்குள் நுழைந்தோம். அங்கும் சாப்பாட்டு மேசையில் அமர்ந்த தலைவர் தன் முன்னே இருந்த ஆசனத்தில் அமரச்சொன்னார்.

நல்ல சாப்பாடு, அன்போடு பரிமாறினார்கள். சாப்பிடும்போது அதிகம் பேசவில்லை.

சாப்பாடு முடிந்ததும் தலைவர் வேறு ஒரு நிகழ்ச்சிக்குச் செல்லவேண்டும். தமிழ்ச்செல்வன் அவர்களையும் அழைத்துச்சென்றார். நான் மீண்டும் நன்றி தெரிவித்துக்கொண்டு விடைபெற்றேன்.

இதற்கு முன் முதலில் நாங்கள் பேசிக்கொண்டிருந்த போது நான் ஒரு கோரிக்கையை, எனது பத்திரிகைப் பணியோடு சம்பந்தப்பட்ட ஒரு ஆசையை தலைவரிடம் முன்வைத்தேன். அவர் அதைக்கேட்டு, சிரித்து ரசித்தார். ஆனால் அதை நிராகரிக்கவில்லை. சாப்பாடு முடிந்த பின்னும் அக்கோரிக்கையை நினைவூட்டினேன்.

"நீங்கள் போற இடங்களுக்குப் போய்விட்டு வாருங்கள் பிறகுபார்த்துக்கொள்ளலாம்" என்றார்.

அந்தக் கோரிக்கைநிறைவேறும் வரை வாசக நேயர்களும் பொறுத்திருக்கத் தான் வேண்டும்.

பேரினவாதிகளுக்கு பேரிடி
பேரரசுகளுக்கு கேள்விக்குறி
போராளிகளுக்கு அன்பான அண்ணன்
தமிழீழ மக்களுக்குப் பாதுகாவலன்
தமிழீழத்திற்கு விடிவெள்ளி
இவையே தலைவர் பிரபாகரன்.

இப்படி எண்ணிக்கொண்டு வீடு திரும்பினேன்.

□□□

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*வேலன்று வெற்றி தருவது மன்னவன்*
*கோலதூஉம் கோடாது எனின்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## ஜனாதிபதி ஏமாற்ற முயல்கிறாரா?

விடுதலைப்புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக சபையை முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை எனறும், ஆனால் இதனை அடிப்படையாகக் கொண்டு புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்திருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து - விசேடமாக நடத்திய கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

உடனடியாக பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து எந்த உறுதிமொழியையும் வழங்காததுடன் மாகாணசபைத் தேர்தலுக்குப் பின்னரே இந்தப் பேச்சுக்களை நடத்த ஜனாதிபதி சந்திரிகா திட்டமிட்டிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ்தேசியக் கூட்டமைப்பை விசேட கலந்துரையாடலுக்கு அழைப்புவிடுத்தது, புலிகளுடன் இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்கத் தயாராக இருப்பதான அறிவிப்பு எல்லாமே அரசியல் நலன் சார்ந்த நடவடிக்கைகளாகவே உள்ளன.

ஜனாதிபதி சந்திரிகா நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக - புலிகள் தொடர்பாகக் கொண்டிருந்த கருத்தை தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்த போது முற்றாக மாற்றியிருந்தார்.

தேர்தல் முடிவு வெளியான பின்னர் நோர்வேயைப் பேச்சுக்கு அழைத்து புலிகளின் சில நிபந்தனைகளுக்கு இணங்குவதாக அறிவித்திருந்தார்.

ஆனால் திடீரென புலிகளின் இடைக்கால நிர்வாக சபை யோசனைகளின் அடிப்படையில் பேச்சு நடத்தத் தயார் இல்லை என்றும் இறுதித் தீர்வு குறித்தே பேசமுடியும் என்றும் அறிவித்ததால் நோர்வேயின் சமாதான முயற்சியில் சிறு பின்னடைவு ஏற்பட்டது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிராத நிலையில் இருந்த ஜனாதிபதி சந்திரிகாவின் தலைமையிலான அரசாங்கத்துக்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலரும், தொண்டமானும் ஆதரவு வழங்கக் கூடிய நிலை உருவானதும் சமாதானப் பேச்சுக்களை இழுத்தடிக்க முனைந்தார்.

ஆனால், கடந்த செவ்வாயன்று நாடாளுமன்றத்தில் ஜாதிக ஹெல உறுமயவின் இரண்டு பௌத்த பிக்குகள் தாக்கப்பட்ட பின்னர் எதிர்க்கட்சிகள் அனைத்தும் அரசாங்கத்திற்கு எதிராகத் திரண்டுள்ளன.

இப்போது எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு அதில் 117 உறுப்பினர்கள் இணைந்துள்ளதால் ஆளும்கட்சியின் நிலை பெரிதும் சிக்கலடைந்து போயிருக்கிறது.

225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியில் 113 உறுப்பினர்களின் ஆதரவைக் கூட தக்கவைக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

எதிர்க்கட்சிகள் தரப்பில் 117 பேர் இருக்கும் நிலையில் சிறுபான்மை அரசாங்கத்தினால் நீண்டகாலம் நிலைத்திருக்க முடியாது என்ற நிலை உருவாகிவிட்டது.

இந்த நிலை ஜனாதிபதி சந்திரிகாவை பெரிதும் ஆட்டம் காணவைத்துவிட்டதென்றே சொல்லலாம். அதிலும் ஆளும் கட்சியின் பெரும்பான்மைப்பலத்தை உறுதி செய்வதற்காக- சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குள் பிளவு ஏற்படுத்திய சந்திரிகாவினால் இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கூட தக்கவைக்க முடியாது போய்விட்டது.

பிரிந்து சென்ற முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களும், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, இ.தொ.கா என்று எதிர்க்கட்சிகளின் வரிசை பலம்வாய்ந்ததாக மாறியுள்ள நிலையில்தான் கூட்டமைப்புக்கு ஜனாதிபதி சந்திரிகா அழைப்பு விடுத்தருக்கிறார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆதரவுடன் ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்வதே ஜனாதிபதி சந்திரிகாவின் திட்டமாகும்.

இதனால் தான் விடுதலைப்புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாகசபைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பேச்சுநடத்தத் தயார் எனவும் தெரிவித்திருக்கிறார்.

இவ்வாறு உறுதிமொழி கொடுத்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு உதவி செய்யாது என்று நினைக்கிறாரோ தெரியவில்லை.

எந்தெந்த நேரத்தில் யாருக்கு எப்படிப்பட்ட வாக்குறுதிகளைக் கொடுத்து மடக்கலாம் என ஜனாதிபதி சந்திரிகா நன்கு அறிந்து வைத்திருக்கிறார்.

இதனால் தான் கூட்டமைப்பினை வசப்படுத்த இப்படி உறுதி மொழியை வழங்கியிருக்கலாம். ஆனால், இங்கேயும் ஜனாதிபதி சந்திரிகா கூட்டமைப்பை ஏமாற்ற முனைந்துள்ளார் போன்றே தெரிகிறது.

சமாதானப் பேச்சுக்களை நடத்த புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் பேசத்தயாராக இருந்தால் மாகாணசபைத் தேர்தல் முடியும் வரை ஏன் பொறுத்திருக்கவேண்டும்?

தீர்வு முயற்சியில் அக்கறையும் அழுத்தமான முடிவும் கொண்டிருந்தால் பேச்சுக்கான திகதியை நிர்ணயம் செய்வதில் ஜனாதிபதி சந்திரிகா ஏன் இந்தளவு இழுத்தடிக்க வேண்டும்?

மீண்டும் ஒரு முறை தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காகவும் தனது ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்குமான நகர்வுகளுக்கு அவகாசம் தேடவுமே கூட்டமைப்பு உறுப்பினர்களை ஜனாதிபதி சந்திரிகா சந்தித்தாரா என்ற கேள்வி தமிழ் மக்களின் மனங்களில் நிறைந்திருப்பதில் எந்தத் தவறுமில்லை.

## நாடும் நடப்பும்




# தமிழீழ காவல்துறையின் வளர்ச்சிக்கு மக்களின் பூரணஒத்துழைப்பே காரணம்

### காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன்

கடந்த பதின்மூன்று ஆண்டுகாலத்துக்குள் சர்வதேசமே கூர்ந்து வியந்து பார்க்கும் அளவிற்கு தமிழீழ காவற்துறை வளர்ச்சி பெற்றமைக்கு மக்களின் பூரண ஒத்துழைப்பே காரணம் என்று தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மன்னார் அடம் பனில் நடைபெற்ற தமிழீழ காவல்துறை யின் பணிமனைத் திறப்புவிழாவில் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சமூக உரிமைகள் சகலரையும் சென்றடையும் வகையிலும், சமூக விடுதலையைச் சமகாலத்தில் பேணும் வகையிலும், தமிழீழ காவல்துறை அமைப்பு எமது மண்ணில் நிறுவப்பட்டுள்ளது.

சமூகத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள், மக்களின் உணரவுகளைத் தெரிந்து கொண்டு அர்ப்பணிப்புடன் இந்தப் பணியில் செயற்பட்டு வருகிறார்கள்.

இதற்கு எமது மக்களும் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகின்றார்கள் என்று தெரிவித்த தமிழீழ காவல்துறைப் பொறுபபாளர். இலங்கையில் பொலிஸ் நீதி - நிர்வாகம் - சட்டத்துறை என்பன மக்களுக்குரிய பாதுகாப்பை வழங்க முடியாதுள்ளன.

இதற்கு உதாரணமாக அண்மையில் நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற சம்பவங்களையும சுட்டிக்காட்டினார். அத்துடன், எமது தாயகப் பிரதேசங்களில் கலாசாரத்தை சீரழிக்கும் வகையில் இலங்கைப் பொலிஸார் செயற்பட்டு வருவதாக தெரிவித்துள்ள காவல்துறைப்பொறுப்பாளர், எமது தாயகப் பிரதேசங்களில் மக்கள் நிம்மதியான வாழ்வியற் சூழலுக்குள் இருக்கின்றனர். இதற்கு எமது காவல்துறையினரின் அர்ப்பணிப்பும் மக்களின் ஒத்துழைப்புமே முக்கிய காரணங்கள் எனவும் தெரிவித்தார்.

சர்வதேச நாடுகளின் தரத்திலான முன்னணிக் காவல்துறை அமைப்பாக, எமது தமிழீழ காவல்துறை அமைப்பையும் கட்டியெழுப்பவேண்டிய அவசியத்தையும் வலியுறுத்திய தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர், காவற்துறைச் செயற்பாடுகளில் மக்கள் கருததுக்களையும் விமர்சனங்களையும் தொடர்ந்தும் தெரிவிக்க வேண்டும். அதுவே எமது காவல்துறையை பலப்படுத்த ஏதுவாக அமையும் என்றும் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் மேலும் தெரிவித்தார்.

# முன்னாள் பிரதிஅமைச்சரின் உதவியாளர் லங்காதீப செய்தியாளர் மீது தாக்குதல்

லங்காதீப பத்திரிகையின் பிராந்தியச் செய்தி ஆசிரியர் மீது, முன்னாள் பிரதி அமைச்சர் சாகலநட்ணாயக்காவின் உதவியாளர் ஒருவா தாக்குதல் நடத்தியதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப பட்டுள்ளது.

கொம்பனித் தெருவில் அமைந்துள்ள ரெலி கொம்மில் வாடிக்கையாளர்கள் பணம் செலுத்தும் இடத்தில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றின் போதே, குணரட்ண என்ற இந்தப் பத்திரிகையாளர் தாக்கப்பட்டார்.

குறிப்பிட்ட முன்னாள் அமைச்சரின் உதவியாளர் வரிசையில் நின்றவர்களை முந்திப் பணம் கட்ட முற்பட்ட வேளை வரிசைக் கிரமத்தில் நின்ற செய்தி ஆசிரியர் குணரட்ண, அவ்வாறு முந்திச்செல்ல முடியாது எனத் தெரிவித்த வேளை, முன்னாள் பிரதி அமைச்சரின் உதவியாளர் அவரைத் தாக்கியதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட பத்திரிகையின் உதவி ஆசிரியர் ஆரியானந்த தொம்பகாவத்த தாக்குதலை நடத்தியவர் மீது உடன் நடவடிக்கை எடுக்காவிடின், கடுமையான எதிர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத்தெரிவித்தார்.

# திட்டமிட்டபடி கிளிநொச்சியில் தொழில்நுட்பக் கல்லூரி நிறுவப்படும்

### அமைச்சர் பியசேன கமகே தெரிவிப்பு

(கிளிநொச்சி)

ஏற்கனவே திட்டமிட்டபடி கிளிநொச்சியில் தொழில்நுட்பக் கல்லூரி நிறுவப்படும் என வினைத்திறன் அபிவிருத்தி, வாழ்க்கைத் தொழில்நுட்பக் கல்வி முதலியவற்றுக்கான அமைச்சர் பியசேன கமமே தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை யாழ்.தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் என்.யோகராஜன அமைச்சரது உத்தியோகபூர்வ இலலத்தில் வைதது, அவரைச்சந்தித்து உரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் வரை இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் யாழ். தொழில்நுட்பக் கல்லூ ரியில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திப் பணிகள், கிளிநொசுசியில் தொழில்நுட்பக் கல்லூரி திறக்க வேண்டியதன் அவசியம் போன்றவற்றை, அமைச்சரிடம் தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் விளக்கிக் கூறினார். அவற்றுக்கெல்லாம் பதிலளிக்கும் வகையில் அமைச்சர் சில உறுதிமொழிகளை வழங்கினார். அவர் அங்கு அளித்த உறுதி மொழிகள் வருமாறு -

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் திட்டமிட்டபடி கிளிநொச்சியில் தொழில்நுட்பக் கல்லூரி நிறுவப்படும். அதற்கான அறிக்கை ஒன்றை விரைவில் உரியவர்கள் எனக்குச் சமர்ப்பிக்கவேண்டும். அதனை அடிப்படையாகக் கொண்டே அதற்கான ஏற்பாடுகள் விரைவில் ஆரம்பிக்கப்படும்.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் கட்டடங்களுக்கு வர்ணம் தீட்டுவதற்கான செலவு விபரம் பெறப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், 25 லட்சம் ரூபா செலவில் திருத்த வேலைகளும் செய்து கொடுக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள நலன்புரி நிலையங்களில் வசிக்கும் பெண்களுக்கான தொழில்பயிற்சி வழங்கும் திட்டமொன்றையும், நடைமுறைப்படுத்த யாழ்.தொழில்நுட்பக்கல்லூரி அதிபர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தினை அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்வது சிறப்பானதாக இருக்குமெனவும் கருதுகிறேன். மரவேலைக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு, விசேட மரவேலைத் தொழில்நுட்பப் பயிற்சியை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும். இதன் மூலம், அந்தப் பயிற்சி பெறுவோர் அதிக நன்மை பெறக் கூடியதாக இருக்கும். பல காலமாக வழங்கப்படாதிருக்கும் ஒப்பந்த அடிப் படையிலான போதனாசிரியர்களின் சம்பளமும், உடன்டியாக வழங்கப்படும் எனவும் அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்தார்.

(ப)

யாழ்ப்பாணம்



# இந்த வார பலன்கள்

## 11.06.2004 - 17.06.2004 (திருக்கணிதம்)

| சந் | ராகு | சூ புத | செவ் சுக் சனி |
|---|---|---|---|
| யுரே | 12இ. 7.39 மே-சந்<br>14ப. 11.08 கட-செவ்<br>14இ. 10.03 மிது-சூரி<br>15கா. 7.26 இட-சந்<br>17கா. 7.21 மிது-புதன்<br>17இ. 8.16 மிது-சந் | | |
| நெப் | | | குரு |
| | | கேது | |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*

மேடராசியில் பிறந்தவர்களுக்கு பொதுவாக இந்தவாரம் நன்மையான பலன்கள் தரும். எனினும், வீட்டிலும் தொழில் பார்க்கும் இடங்களிலும், கவனத்துடன் செயற்படவேண்டும். சிறிது பிரச்சினைகள் தோன்றினாலும், குருவின் பார்வையால் உடனுக்குடன் நேர்செய்யப்படும். கணவன் மனைவியிடையே நெருங்கிய உறவு ஏற்படும். உறவினர்கள், நண்பர்கள் உதவுவார்கள். மங்கல கருமங்கள் நடைபெறக் கூடிய வாய்ப்புகள் தென்படுகின்றன. வர்த்தகர்களுக்கு வியாபாரம் லாபகரமாக நடக்கும். வாடிக்கையாளர்கள் அதிகமாக தேடி வருவார்கள். உத்தியோகத்தர்களுக்கு முன்பிருந்த இடையூறுகள் நீங்கும். அதிகாரிகள் ஒத்துழைப்பு நல்குவர். மாணவர்களுக்கு எதிர்காலம் சிறப்பாக அமையும் நல்ல முன்னேற்றமுண்டு.

### இடபம்

(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்)

இடபராசியில் பிறந்தவர்களுக்கு ஏழரைச்சனி கடைசிப் பகுதி நடப்பதால், சில கஷ்டங்களைச் சமாளிக்க வேண்டியிருக்கும். குடும்பத்தில் கருத்து வேற்றுமைகள் தோன்றலாம். பிள்ளைகளால் செலவுகள் அதிகரிக்கும். செலவுகள் கூடுதலாகக் காட்டும். இதன் காரணமாக, கடன்படும் நிலை தவிர்க்க முடியாமல் இருக்கும். குடும்பப்பெண்கள் அவதானத்துடன் சிக்கனத்தைக் கடைப்பிடித்தல் நன்று. திருமணப் பேச்சுக்கள் காலந்தள்ளிப் போகும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலையைக் காட்டும். புதிய முதலீடுகளைத் தவீர்த்தல் நன்று. தொழில் புரிவோர் புதிய மாற்றங்களைச் சந்திக்க நேரிடும். உத்தியோகத்தினர் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நன்மையளிக்கும். அரசியல்வாதிகளும் பிரச்சினைகளைச் சுமந்து செல்வர். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றத்துக்கு இடையூறுகள் ஏற்படும்.

### மிதுனம்

(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்)

மிதுனராசியில் ஜனனமானவர்களுக்கு செய்தொழிலில் முன்னேற்றமிருந்தாலும், பலவித சிரமங்களும் தொடரும். குடும்பத்தில் இடையிடையே சச்சரவுகள் ஏற்படும். கொடுககல், வாங்கல்களில் அவதானம் தேவை. தொடங்கும் கருமங்கள் தாமதத்தின் மேல் நிறைவு பெறும். விவாகப் பேச்சுக்கள் முதலியன காலதாமதம் காட்டும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நட்டத்திலேயே நடக்கும். கறுப்பு மார்க்கட் வியாபாரம் கூடுதல் லாபம் தரும். தொழில் செய்வோருக்கு ஊதியம் பற்றாக்குறையாகவே இருக்கும். உத்தியோகத்தருக்கு வேலைப்பழு கூடுதலாகக் காட்டும். சகதொழிலாளர்களின் உதவிகள் கிடையாது. அதிகாரிகளுக்கேற்ப நடந்து கொள்ளவும். மாணவர்களுக்கு கல்வியில் மாற்றங்கள் காட்டும். பரீட்சை முடிவுகள் திருப்தியாக இராது.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*

கடகராசியில் பிறந்தவர்களுக்கு செய்தொழில் சிறப்பைத் தரும். வருவாய் அதிகரிக்கும். எதிர்பார்த்த நன்மைகள் வாரஇறுதியில் வந்து சேரும். குடும்ப ஒற்றுமை, மகிழ்ச்சி, செல்வாக்கு என்பன சிறப்படையும். புத்திரர்களால் மகிழ்ச்சி ஏற்படும். வெளிநாடுகளில் பணவருவாய் கிடைக்கும். திருமணப் பேச்சுக்கள் நன்மையான பலன் தரும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். வங்கி உதவிகளும் கிடைக்கும். வாடிககையாளர்களின் வரவு கூடும். உத்தியோகத்தர்களின் செல்வாக்கு அதிகமாகும். அதிகாரிகளின் ஒதத்துழைப்பு கிடைக்கும். சிலருக்கு தொழில் உயர்ச்சி, வசதியான இடமாற்றங்கள் ஏற்படலாம். மாணவர்களின் எதிர்காலம் சுபீட்சமாக அமையும். உயர் கல்வீ கற்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு தொழில் வாய்ப்பு உண்டு.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*

சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு தொழில் நிலையில் முன்னேற்றமுண்டு. முன்பிருந்த பணக்கஷ்டங்கள் நீங்கும். குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். இனபந்துக்களின் வருகை அதிகரிக்கும். வீட்டில் சுபநிகழ்வுகள் நிகழ இடமுண்டு. பிள்ளைகளால் நன்மையும், மகிழ்ச்சியும் ஏற்படும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். திருமணப் பேச்சுககள் இழுபறி நிலையையே காட்டும். தனித்தொழில் செய்வோர் பொருளாதார நிலையை மேம்படுத்த வேண்டும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்றாக நடக்கும். புதிய முதலீடுகளுக்கு உகந்த காலமல்ல. உத்தியோகத்திலுள்ளோா முன்பு எதிர்கொண்ட கஷ்டங்கள் குறையும். கௌரவம் மிகும். மாணவர்கள் முன்னேற்றமடைவர்.

### கன்னி

*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*

கன்னி ராசியில் பிறந்தவர்ளுக்கு செய்தொழில், சிறப்படையும் குடும்பத்தில் நிம்மதியும், நல்வாழ்வும் அமையும், போதிய பணவருவாய் கிடைக்கும், பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். குடும்பப் பெண்கள் சந்தோஷத்துடன் காணப்படுவார்கள். வெளிநாடுகளில் இருந்து சுபசெய்தி கிடைக்கும். அடிக்கடி பிரயாணங்கள் ஏற்படும். திருமணப் பேச்சுக்கள் நிறைவான பலனைக் கொடுக்கும் தேக சௌக்கியம் பாதிக்காது. வர்த்தகர்களுக்கு வியாபாரம் ஓரளவு திருப்தியாக இருக்கும். இரும்பு வியாபாரம் செய்வோர் கூடிய இலாபம் பெறுவர். உத்தியோகத்திலுள்ளோர் மேலதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாக நேரிடும். அதிகாரிகளுடன் ஒத்துப்போவது நன்மைதரும். மாணவர்கள் கல்வியில் சிறப்படைவார்கள். சிலருக்கு கல்வி சம்பந்தமான பிரயாணம் கிட்டும்.

### துலாம்

*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*

துலாராசியில் பிறந்தவர்களுக்கு எதிர் பார்த்த கருமங்களில் தடைகள் ஏற்படலாம். தொழில் நிலையில் அவதானத்துடன் செயற்படவும். வெளியூரில் இருந்து உறவினரமூலம், பண வருவாய் கிடைக்கும். இனபந்துக்கள், நண்பரகள் உதவுவார்கள். கணவன் மனைவியிடையே உறவுவலுக்கும். தேக ஆரோக்கியம் பற்றி அவதானமாக இருத்தல் நன்று. விவாகப் பேச்சுக்கள் மகிழ்சசியான முடிவைத் தரும். வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் மத்திம லாபம் கிடைக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்துப் போதல் நன்று. உத்தியோகத்தர்களுக்கு மறைமுக எதிர்ப்புக்கள் ஏற்படலாம். அவதானமாகச் செயற்படவும். மாணவர்கள் கல்வியில் முயற்சியடைவர்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*

விருசசிக இராசிக்காரர்களுக்கு செய்தொழிலில் மாற்றங்கள் ஏற்படலாம். பண வருவாய் பெறுவதில் சில சிக்கல்களைத் தாண்ட வேண்டியிருக்கும். அட்டமத்தில் இருக்கும் சனி சில சிக்கல்களைக் கொடுக்கும். எனவே, எல்லாவற்றிலும் கூடிய அவதானம் வேண்டும். மறைமுகச் சத்துருக்களாலும் தொல்லைகள் உண்டாகும். தேக சுகத்தை பேணிக்கொள்வது நன்று. தொடங்கும் கருமங்களில் தடை தாமதங்கள் காட்டும். விவாகப் பேச்சுக்கள் கால வரையறையின்றித் தள்ளிப் போகும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தகரமாக இருக்கும். புதிய முதலீடுகளைத் தடுக்கவும் உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு அதிகமாகும். உதவிகளும் கிடையாது. மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம் நடுத்தரமாக இருக்கும்.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*

தனுசு ராசியை ஜனனமாகக் கொண்டவர்களுக்கு தொழிலில் சில மாற்றங்கள் ஏற்படலாம். பிரையாசை அதிகமாகும். தொழிலுக்கேற்ற வருவாய் கிடைக்காமற் போகலாம். குடும்பத்தில் சில கருத்து வேற்றுமைகள் ஏற்படக் கூடும். தேக ஆரோக்கியம் இடையிடையே பாதிக்கப்படலாம். மருத்துவச் செலவுகளும் அதிகமாகும். காதல் விவகாரங்கள் தோல்வியைத் தரும் தனித்தொழில் செய்வோர் தொழிலாளிகளின் ஒத்துழைப்பைப் பெறுவது கடினம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் ஓரளவு நடந்தாலும், கடனே கூடுதலாக இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலைமாற்றங்கள், இடமாற்றங்கள் ஏற்பட இடமுண்டு. சிலர் பொது மக்களின் வெறுப்புக்கு ஆளாக வேண்டிவரும். மாணவர்கள் கல்வியில் கூடிய ஊக்கமெடுத்தல் வேண்டும்.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*

மகர ராசியில் பிறந்தவர்களுக்கு அட்டமத்து வியாழன் நடப்பதால், நற்பலன்கள் குறையும். தொழில் நிலையில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம். குடும்பச் செலவுகளும் கட்டுக்கடங்காமல் போகும். தொடங்கும் கருமங்களில் தடை தாமதம் இழுபறி ஏற்படலாம். குடும்பப்பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். விவாகம் சம்பந்தமான பேச்சுக்கள் ஏமாற்றத்தில் முடியும். வர்த்தகர்களுக்கு பழைய முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். வியாபாரம் நட்டத்திலேயே நடக்க நேரிடும். வங்கி உதவிகள் உரிய நேரத்தில் கிடையாது. உத்தியோகத்தர்களுக்கு வேலை மாற்றம் ஏற்படலாம். மேலதிகாரியின் ஒத்துழைப்புக் கிடைக்காமல் போகலாம். மாணவர்கள் கல்வியில் மந்த நிலை அடைவர். ஊக்கமும், உற்சாகமும் வேண்டும்.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*

கும்பராசியினருக்கு தொழில் நிலை பொதுவாக உண்டு. வியாழன் ஏழாம் இடத்தில் இருந்து நோக்குவதால், பணவருவாய் தேவைக்கேற்ப கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கொடுக்கல், வாங்கல்களில் அவதானம் தேவை. புத்திரர்களால் மகிழ்ச்சி உண்டாகும். வீட்டில் சுப நிகழ்வுகள் ஏற்படும். திருமணப் பேச்சுக்கள் வெற்றியளிக்கும். வர்த்தகர்களின் வியாபாரம் சிறப்படையும். பழைய முதலீடுகள் யாவும் விற்பனையாகி பணம் கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் ஒத்துழைப்புக் கிடைக்கும். சிலருக்கு உயர்ச்சி ஏற்படலாம். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் அடைவர். பரீட்சையில் சித்தியுண்டு.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*

மீனராசியில் பிறந்தவர்களுக்கு தொழில் ஸ்தானங்களில், அவதானத்துடன் நடந்து கொள்ள வேண்டும். மறைமுக எதிர்ப்புக்கள் உண்டு. பணவருவாய் தேவைக்கேற்ப கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை உருவாகும். பிள்ளைகளால் உதவியுண்டு. பிரயாணங்களின் போது அவதானமாக இருக்கவும். பொருள் நட்டம் ஏற்பட இடமுண்டு. தேகாரோக்கியம் சிறிது பாதிக்கப்படலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நடுத்தரமாக இருக்கும். வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்தினால் உயர்ச்சி உண்டு. திருமணப்பேச்சுக்கள் கால தாமதத்தின் மேல் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு, ஊதியயுயர்வு கிடைக்க இடமுண்டு. அதிகாரிகள் ஒத்துழைப்பார்கள் மாணவர்களுக்கு கல்விக் குறைபாடுகள் நீங்கி முன்னேற்றப் பாதை திறக்கும்.

---

**ஒரு படைப்பாளியின் நினைவாக... பகுதி -2** - தி.ஞானசேகரன்

# மலையக இலக்கிய மறுமலர்ச்சியில் பங்காற்றிய எழுத்தாளர் கே.கணேஷ்



**முதுபெரும் எழுத்தாளரும் சிறந்த பத்திரிகையாளருமான கே.கணேஷ் அண்மையில் காலமானார் அவரின் நினைவாக இந்தக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

(நேற்றைய தொடர்ச்சி.....)

## ஆரம்பகால முயற்சிகள்

கணேஷ் அவர்களின் ஆரம்ப கால எழுத்து முயற்சிகள் 1932 இல் மாணவப் பருவத்தில் அவரது பன்னிரண்டாவது வயதிலேயே ஆரம்பமாகின. தமிழ்நாட்டில் பிரபலமாக விளங்கிய சஞ்சிகையான 'ஆனந்த போதினி'யில் 'அறம் செய்ய விரும்பு' என்ற சிறுவர் கட்டுரையை எழுதியதன்மூலம் கணேஷ் எழுத்துலகில் பிரவேசித்தார். அதனைத் தொடர்ந்து டாக்டர் பரதராஜ நாயுடு அவர்களது 'தமிழ்நாடு' வார சஞ்சிகையிலும் இவரது ஆக்கம் பிரசுரமாகியது. 1935 ஆம் ஆண்டுமுதல் 'மாதர் மறுமணம்' என்ற சஞ்சிகையில் இவரது கவிதைகள் பிரசுரமாகின.

1939 இல் கே.ராமநாதன், இ.மாயாண்டி பாரதி, சக்திதாசன் சுப்பிரமணியம் ஆகியோர் சென்னையில் 'இளைஞர் காங்கிரஸ்' என்ற அமைப்பினை உருவாக்கினர். இந்த அமைப்பினரால், சுபாஷ்சந்திரபோஸின் கொள்கை அருட்டுணர்வுடன் 'லோக சக்தி' என்ற சஞ்சிகை வெளியிடப்பட்டது. சென்னையில் முற்போக்குக் கருத்துக்களை வெளியிட்ட முதல் சஞ்சிகையாக இது திகழ்ந்தது.

லோகசக்தி ஐந்தாவது இதழில் (1939 செப்டெம்பர் பேரிகை 1, ஒலி5) தத்தமங்கலம் க.கணேசன் என்ற இவரது பெயரில் 'மாணவர் பேரிகை' என்ற கவிதை வெளியானது.

கணேஷ் அவர்களின் நண்பரான இ.மாயாண்டி பாரதி பின்னர் 'ஜனசக்தி' ஆசிரியர் குழுவில் சேர்ந்தார். ஜனசக்தியின் ஆசிரியரான ப.ஜீவானந்தம் தன் எழுத்துக்கள் மூலம் நண்பராகிக் கொண்டார். இதன் காரணமாக கணேஷ் தனது சொந்த ஆக்கங்களையும் மொழிபெயர்ப்புக் களையும் ஜனசக்தியிலும் வெளியிட்டார்.

கவிஞர் தமிழ்ஒளி, கவிஞர் குயிலன் ஆகியோர் சேர்ந்து நடத்திய 'தென்றல்' பத்திரிகையிலும் கணேஷ் சிலகாலம் பணியாற்றினார்.

1935-1938 களில் 'மணிக்கொடி' பத்திரிகை மிகவும் பிரபல்யம் பெற்றிருந்தது. அப்போது பி.எஸ்.ராமையா அதன் ஆசிரியராக இருந்தார். க.சுப்பிரமணியம், புதுமைப்பித்தன், கு.ப.ராஜகோபாலன், நா.பிச்சமூர்த்தி, சிட்டி போன்றோர் இதில் சேர்ந்து இயங்கினர். கணேஷின் இலக்கிய ஆக்கங்களுக்கு உற்சாகம் அளித்தும் நல்வழி காட்டியும் ஊக்குவித்தார். பி.எஸ். ராமையா, ப.ரா. என்ற பா.ராமசாமி அவர்களும் மணிக்கொடியில் இவரது ஆக்கங்கள் வெளிவர உற்சாகமளித்தார் 'ஆசாபாசம்' என்ற சிறுகதையும் இவரது முதலாவது மொழி பெயர்ப்பு முயற்சியான 'அதிஷ்டசாலி' என்ற ஹங்கேரியச் சிறுகதையும் வெளிவந்தன. கலைஞன் பதிப்பகம் அண்மையில் வெளியிட்டுள்ள மணிக்கொடித் தொகுப்பில் 'அதிஷ்டசாலி' சிறுகதை, தத்தமங்கலம் க.கணேசன் என்ற பெயருடன் இடம்பெற்றுள்ளது.

"ராஜகோபாலனை ஆசிரியராகக் கொண்ட 'கலாமோகினி', கு.ப.ரா.வையும் பின்னாளில் வல்லிக்கண்ணனையும் ஆசிரியராகக் கொண்ட 'கிராம ஊழியன்', திரிலோக சீத்தாராமை ஆசிரியராகக் கொண்ட 'சிவாஜி தி.ஜ.ராவை ஆசிரியராகக் கொண்ட 'சக்தி', 'ஹனுமான்', 'ஹிந்துஸ்தான்' ஆகிய பத்திரிகைகளிலும் கணேஷின் ஆக்கங்கள் வெளிவந்தன.

## எழுத்துப்பணிகள்

கணேஷ் அவர்கள் தமது சொந்தப் பெயரிலும் 'சித்தார்த்தன்', கலாநேசன்', 'கே.ஜி', 'மலைமகள்', 'கணேசு' ஆகிய புனைபெயர்களிலும் எழுதியுள்ளார்.

அவரது எழுத்து முயற்சிகளில் மிக முக்கியமானது. சிறந்த பிறநாட்டு இலக்கியங்களை தமிழ்மொழியில் பெயர்த்ததாகும். அத்தோடு, சுய ஆக்கங்களாக சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், பத்தி எழுத்துக்கள் எனப் பலதரப்பட்ட துறைகளிலும் கணேஷ் தனது பங்களிப்பை நல்கியுள்ளார்.

கணேஷின் எழுத்துக்களில் காணப்படும் பொதுப்பண்புகளாக, சமதர்ம நாடுகள் எனக் கொள்ளப்பட்ட நாடுகளின் விடுதலை உணர்ச்சி, மனித விடுதலை உணர்ச்சிப் போராட்டங்கள், விடுதலை உரிமை உணர்வு, மானிட நேயம் என்பனவும் எல்லோருக்கும் யாவும் பொது என்ற அடிப்படையும், எதிர்காலம் மீது கொண்ட நம்பிககைகள், விருப்புகள், எதிர்பார்ப்புகள் ஆகியனவும் அடங்கியிருக்கும், அத்தோடு ஒடுக்கப்பட்ட மக்களின் துயரப்பெருமூச்சுகள், சோகம், அடிமைவாழ்க்கை ஆகிய பல்வேறு உணர்வுகளின வெளிப்பாடாகவும் அவை அமைந்திருக்கும்.

கணேஷ் ஒரு முற்போக்கு எழுத்தாளர். அந்த வகையில் அவர் மொழிபெயர்ப்புக்குத் தேர்ந்தெடுத்த நூல்களும் மார்க்சியப் பார்வை கொண்டவையாக அமைந்தன. "மார்க்சிய எழுத்தாளர்களின் பார்வையில் குறிப்பாக அவதானிக்கவேண்டிய பண்பு, மானுடம் தழுவிய பார்வை. மார்க்சிய அரசியலுடன் இந்தப் பார்வை பின்னிப்பிணைந்துள்ளது. துன்பங்கள் துயரங்கள் வாழ்வின் முடிவல்ல. உண்மைச் சமதர்மமும் விடுதலையுமே இறுதிப்படிகள். அதற்கான போராட்டத் தீர்வுகள், வழிமுறைகள் என்பவற்றைச் சித்திரிப்பதற்காக, அதற்கென மனிதனை வழிநடத்துவதாக, குறிப்பாக சமுதாய யதார்த்தமாக அந்தப்பார்வையை மார்க்சிய படைப்பாளிகள் கொள்வர்". கணேஷ் மொழிபெயர்த்த இலக்கியங்களிலும் இந்தப் பண்புகள் அமைந்துள்ளன.

கணேஷின் மொழிபெயர்ப்பாக நாவல், குறுநாவல்கள், கவிதைகள் இடம்பெற்றன.

(தொடரும்)

**நாகம்ஸ்** சுன்னாகம்

மாற்றியமைக்கப்பட்ட டொல்பி ஒலி அமைப்புடன்

விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த



**கில்லி** (றீல்ஸ்)

(சி-2622)

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு 11.00, 3.00, 7.00, 10.00



**ராஜா** யாழ்ப்பாணம்.

3 ஆவது வாரமாக இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடான

சூர்யா, சித்தார்த், மாதவன், மீரா ஜாஸ்மின், திரிஷா நடித்த

**ஆய்த எழுத்து**



காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30 மட்டும் (பு.நே)

(சி-2623)



# சிறுவர் அரங்கு
## Children's Theatre

புதிய பயிற்சிப் பிரிவு ஆரம்பம்

செயல்திறன் அரங்க இயக்கம் புதிதாக ஆரம்பிக்கவுள்ள சிறுவர் அரங்கப் பயிற்சியில் பங்குபற்ற விரும்புபவர்களிடம் இருந்து விண்ணபபங்கள் கோரப்படுகின்றன.

**பயிற்சிக் காலம்** - நான்கு மாதங்கள்
*(கிழமை நாட்களில் விரிவுரைகள் நடைபெறும்)*
பயிற்சி முடிவில் சிறப்பாக தேர்ச்சி பெறுவோர் தொழில்சார் ஆற்றுகையாளர்களாக இணைத்துகொள்ளப்படுவார்கள்.

**பாடவிதானம்**
- சிறுவர் நாடக எழுத்துருப்படைப்பாக்கம்
- நடிகருக்கான அடிப்படை பயிற்சி
- சிறுவர் நாடகத் தயாரிப்பு

**எதிர்பார்க்கப்படும் தகுதி**
1. க.பொ.த (உ/த) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. வயதெல்லை 20 - 30
3. நாடகமும் அரங்கியலும் பாடத்தில் சித்தி, அனுபவம் விசேட தகுதிகளாகக் கருதப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி:- 20.06.2004
தொடர்பு முகவரி :- செயல்திறன் அரங்க இயக்கம்
Active Theater Movement
'அருளகம்' ஆடியபாதம் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-2659)


# கிளர்ச்சியாளர்களை வெளியேற்ற பாகிஸ்தான் தொடர்ந்து தாக்குதல்



ஆப்கானிஸ்தான் எல்லைக்கு அருகில் கிளர்ச்சியாளர்களை அப்புறப்படுத்துவற்கான தாக்குதல்களை, தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக பாகிஸ்தான் இராணுவம் அறிவித்துள்ளது.

தெற்கு வாஸிரிஸ்தான் பகுதியில் உள்ள கிளர்ச்சியாளர்களின் தளங்கள் மீது, ஆட்லறிகள் மற்றும் ஹெலிகொப்டர்களின் துணையுடன் பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல் நடத்திவருகின்றது.

இந்தத் தாக்குதல்களில் ஏழு கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் - 35 வெளிநாட்டு கிளர்ச்சியாளர்களும், 15 பாகிஸ்தான் படையினரும் கொல்லப்பட்டனர்.

அதேவேளை நேற்று தெற்கு வாஸிரிஸ்தான் பகுதியில் பலத்த குண்டுச் சத்தங்களும், துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும், கேட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

வானா நகரில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பாகிஸ்தான் துருப்புக்களுக்கு உதவியாக விமானப்படை ஜெட்போர்விமானங்களும் ஹெலிகொப்டர்களும் பறந்துகொண்டிருந்தன.





**THE ROYAL COLLEGE OF JAFFNA**

ஆங்கிலம் படிக்கின்றீர்கள், புத்திசாலியாகவும் இருக்கிறீர்கள். ஆனால் கதைக்க முடியவில்லையா? கவலை வேண்டாம்.
Spoken English By -
விக்னேஸ்வரன் ஆச்சாரி.
426, (302) K.K.S வீதி, யாழ்ப்பாணம்,
பிளாக் வீதி, சங்கானை. (சி.2641)



**நிறைஞ்சனாஸ்** சங்கானை

அர்ஜீன், ரம்பா, ஆனந்தராஜ் நடித்த

**அடிமைச் சங்கிலி**

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு இரவு8.45 (பு.நே)
INTREPID

(சி-2621)


# இறக்குமதியாளர் கவனத்திற்கு

வருவாய்ப்பகுதியில் இறக்குமதிக்கான உரிமத்தைப் பெற்று, இறக்குமதியிலீடுபடாத இறக்குமதியாளர் அனைவரையும் 2004.06.30 ஆம் நாளிற்கு முன் கிளிநொச்சியிலமைந்துள்ள வருவாய்ப்பகுதிச் செயலகத்துக்கு நேரில் வருமாறு வேண்டுகிறோம். தவறுவோரின் உரிமம் நீக்கப்படுமென்பதை அறியத்தருகிறோம்.

**பொறுப்பாளர்,**
நடுவப் பணியகம்,
வருவாய்ப்பகுதி - நிதித்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள். (759)


## சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்

City & Guilds

அரச யாழ்.தொழில் நுட்பக் கல்லூரியில் பயிற்சியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கும், கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கும் ஏனைய தொழில் நுட்ப வல்லுநர்களுக்கும், உலக நாடுகள் 102 இனால் அங்கீகரிக்கப்பட்ட & இங்கிலாந்து City Guilds சான்றிதழ் பெறும் வாய்ப்பு

அரச யாழ். தொழில்நுட்பக் கல்லூரி, மற்றும் கிளிநொச்சி மாவட்ட தொழில் நுட்பக்கல்வி நிறுவனம் ஆகியவற்றில் பயிற்சியை முடித்துக்கொண்ட மாணவர்களும், ஏனைய தொழில்நுட்ப வல்லுனர்களும், இலங்கையிலிருந்து நேரடியாக **London City &guilds** நிறுவனத்தினால் நடாத்தப்படும் செய்முறைப் பரீட்சையில் தோற்றி சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு தற்போது யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

செய்முறைப் பரீட்சை மேற்கொள்வதற்கு ஏதுவாக் குறுகியகாலப் பயிற்சியை வழங்குவதற்கான ஏற்பாடுகள் தற்போது யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.

| பாடநெறி | செயன்முறை பரீட்சைக் காலம் | பயிற்சிக் கட்டணமும் பரீட்சைக் கட்டணமும் | City & Guilds சான்றிதழ் கட்டணம் |
|---|---|---|---|
| மின்னிணைப்பு (Electrical Installation ) | 24 hrs | Rs. 3864.00 | £22 |
| உலோக இயந்திரவியல் (Metal Mechining) | 40 hrs | Rs. 3645.50 | £16 |
| மரவேலை தொழில் நுட்பப் பயிற்சி (Timber Vocation) | 32 hrs | Rs. 5934.00 | £22 |
| பொருத்துதல் மற்றும் குழாய் வேலைகள் (Fabrication Welding and Pipe work) | 96 hrs | Rs. 7670.50 | £16 |
| கட்டுமான வேலை (Masonary) | 32 hrs | Rs. 5589.00 | £22 |
| குழாய் நீர் அமைத்தல் (Plumping) | 16 hrs | Rs. 4209.00 | £22 |

விண்ணப்படிவங்களை யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அலுவலகத்திலும், கிளி நொச்சி தொழில்நுட்ப நிறுவனத்திலும் பெற்று 30.06.2004 க்கு முன்பாக தொழில் நுட்பக் கல்லூரி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

*குறிப்பு :-*
பயிற்சி மற்றும் பரீட்சைக்கான கட்டணங்களை ஹற்றன் நஷனல் வங்கியின் நகரக் கிளை (HNB City office) கணக்கு இல. 002-0741376 இல் செலுத்தி பற்றுச் சீட்டினை விண்ணப்பத்துடன் இணைக்கவும்.

**மேலதிக தகவல்களுக்கு அணுகுங்கள்: திணைக்களம்/கல்லூரி**
**இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி**
அல்லது
யாழ்ப்பாணம் 021-2225409/ மட்டக்களப்பு 065-2246557/ திருகோணமலை 026-2223034
**City &Guilds** நிறுவனம்
6 மாடி **Access** கட்டடம் 278, யூனியன் பிளேஸ், கொழும்பு -2
தொலைபேசி (011) -5361427/8
தொலை நகல்: srilanka@city-and-guilds.co.uk
வெப் தளம்: www.cityandguilds.com

(C-2658)



பிரபல அழகுக்கலை நிபுணர் திருமதி பிரபாரெட்டியின் மாணவி நடாத்தும்



## கலந்துரையாடல்

மேற்படி இக்கலந்துரையாடல் நிகழ்வானது, **திருமதி பிரபாரெட்டியிடம்** பயிற்சிபெற்று சான்றிதழ் பெற்ற மாணவர்களையும், அழகுக்கலைபற்றி அறிந்துகொள்ள ஆர்வமுள்ள மாணவர்களையும் கருத்தில்கொண்டு நடைபெறவுள்ளது.

**இடம்** :- யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபம்.
**காலம்** :- 13.06.2004 ஞாயிற்றுக்கிழமை
**நேரம்** :- காலை 9.00 மணி

**ஆர்வமுள்ள அனைவரும் வருக.**
**அனுமதி இலவசம்.**

T.P. 024 - 4 - 589464
071 - 2346781
077 - 6209963 நிர்வாகம்.

(சி-2652)


உலகச் சூழல் தினம் - யூன் 05



World Environment Day - June 05

எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்.

# கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

2,000 கிலோமீற்றர்கள் நீளத்துக்குக் காணப்படும் பாரிய தடுப்புக் கற்பாறைத் தொடர் (Great Barrier Reef) எனப்படும் அவுஸ்திரேலியாவில் உள்ள முருகைக்கற்பாறைத் தொடரே உலகின் மிக நீளமான உயிர்வாழும் அமைப்பாகும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland



நேற்று யாழ். செயலகத்திற்கு வருகைதந்த அமெரிக்காவின் மார்சல் லெகாசி நிறுவனத்தின் அதிகாரிகள் சிலரைப் படத்தில் காணலாம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில்

# வெடிபொருட்களை அகற்ற ஏழு மோப்பநாய்கள் வரும்!

## அமெரிக்க அதிகாரி தகவல்

யாழ்.மாவட்டத்தில் வெடிபொருட்களை அகற்றுவதற்காக 7 மோப்ப நாய்கள் கொண்டுவரப்படவிருப்பதாக யாழ்.செயலகத்தில் இயங்கும் மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்திற்கு நேற்று விஜயம்செய்த அமெரிக்காவின் மார்சல் லெகாசி நிறுவனத்தின் தலைவர் கேணல் றெஜி எவ்.பல்ரிமோரி தெரிவித்தார்.

யாழ்.செயலகத்திற்கு விஜயம் மேற்கொண்ட கேணல் பல்ரிமோரி யாழ்.அரச அதிபர் மற்றும் திட்டமிடல் பணிப்பாளர்கள் மிதிவெடி செயற்பாட்டு அலுவலர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

யாழ்.மாவட்டம் உட்பட இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் மிகமுக்கிய பிரச்சினையாக உள்ளது வெடிபொருட்களின் அபாயமாகும். இதனைப் போக்குவதற்காக எமது நிறுவனம் பல்வேறு உதவிகளை இலங்கைக்கு வழங்கி வருகிறது. இதன் ஒருகட்டமாக வெடிபொருட்களை அகற்றுவதற்கு இலகுவான வழிமுறையாகவும் அண்மைக்காலங்களில் சர்வதேச ரீதியில் நாய்களின் பயன்பாடு அதிகரித்து வருகின்றது.

இதனை இங்கும் கையாளுவதற்கு வசதியாக 7 மோப்ப நாய்கள் நிரந்தரமாக யாழ்.வெடிபொருட்கள் அகற்றும் செயற்பாட்டு மையத்திற்கு வழங்கப்படவுள்ளது.

இதனைவிட அமெரிக்காவில் நிதிதிரட்டப்பட்டு மேலும் சில உதவிகளை புரிவதற்கான நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்கின்றோம்.

வடக்கு - கிழக்கில் இயல்பு வாழ்க்கை திரும்புவதற்கு வெடிபொருட்கள் அகற்றல் இன்றியமையாத ஒரு செயற்பாடாகும்.

இங்குள்ள வெடிபொருட்கள் அகற்றும் பணியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ள கஷ்டங்களுக்காகவே நாய்களை இச்சேவையில் ஈடுபடுத்தத் திட்டமிட்டுள்ளோம். நாய்களுக்கான பயிற்சிகள் நிறைவுற்றுள்ளன. அவை விரைவில் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவரப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் மோரியுடன் மாசல் லெகாசி நிறுவனத்தைச் சேர்ந்த அந்தனிலீக், பிரிகேடியர் றொகான் ராஜசிங்க உள்ளிட்ட 16 அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

இதேவேளை வடக்கு - கிழக்கில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணி வெடிகளை கண்டுபிடித்து அகற்றுவதற்காக அமெரிக்காவின் வொஷிங்ரன் நிலக்கண்ணிவெடிகளை செயலிழக்கச் செய்யும் பிரிவிலிருந்து ஒரு கோடி 40 இலட்சம் பெறுதியான 7 மோப்ப நாய்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

கண்ணிவெடிகளை அகற்றும் விசேட பயிற்சிபெற்ற படையினரோடு, இந்த 7 மோப்ப நாய்களும் எம்பிலிப்பிட்டிய இராணுவத்தளத்தில் நடைபெற்ற பயிற்சிகளின்போது பங்குபற்றின.

அடுத்துவரும் வாரங்களில் மோப்ப நாய்கள் உட்பட விசேட பயிற்சிபெற்ற படையினர் குழுவும் யாழ்ப்பாணத்திற்கு வரவுள்ளது.

# மோட்டார் சைக்கிளில் சென்றோரை கன்ரர் வாகனம் மோதியது!

## வட்டக்கச்சியில் நால்வர் காயம்

கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியில் கன்ரர் வாகனம் மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில், இரண்டு சிறுவர்கள் உட்பட நான்குபேர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக்காலை 9.20 மணியளவில் வட்டக்கச்சி கோவிந்தன் கடைச்சந்திக்கு அண்மையாக, இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதன்போது ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த அ.மோகேஸ்வரன் (வயது 33) மோகேஸ்வரன் ஜசிந்தா (வயது 9) மோகேஸ்வரன் வசந்தன் (வயது 4) சிவச்செல்வன் (வயது 30) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இவர்களை கன்ரர் வாகனம் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

மோதிய வாகனம் தப்பிச்சென்று விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்தவர்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மேற்படி விபத்து தொடர்பாக கிளிநொச்சி காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (தீ)

# கூட்டமைப்பு எம்.பிக்கள் களுத்துறைக்கு விஜயம்

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று களுத்துறைச் சிறைசாலைக்குச் சென்று தமிழ் அரசியல் கைதிகளைப் பார்வையிட்டனர்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மா.க.ஈழவேந்தன், செ.கஜேந்திரன், எஸ்.சிவநேசன் ஆகியோரே களுத்துறைச் சிறைச்சாலைக்குச் சென்று கைதிகளின் நிலைப்பாடு குறித்துக் கேட்டறிந்தனர்.

கைதிகள் தமது அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பான முறைப்பாடுகளை நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்தனர். தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளை விசாரிக்கவென வெலிககடையில் அமைக்கப்பட்டிருந்த விசேட நீதிமன்றம் தற்போது செயற்படாமையால் தமது வழக்கு விசாரணைகள் காலதாமதத்திற்குட்பட்டு வருவதாகவும் மீண்டும் அத்தகைய சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்படுதல் வேண்டுமெனவும் கைதிகள் தெரிவித்தனர்.

அது மட்டுமன்றி தமக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் வைத்திய வசதிகள் செய்யப்பட்டுவந்த போதிலும் கடந்த சில மாதங்களாக அந்த ஒழுங்குகள் கைவிடப்பட்டிருப்பதாகவும் அச்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றபோதிலும் மருந்துகள் வழங்குவதற்குக் கைதிகளுக்கு வீட்டிலிருந்து வரும் பணத்தையே பயன்படுத்துமாறு சிறைச்சாலைக் அதிகாரிகள் கூறுவதாகவும் தெரிவித்தனர்.

இவ்வாறு வீட்டிலிருந்து வரும் பணத்தைக்கொண்டு மருந்து வாங்கும் தகுதி எல்லோருக்கும் இல்லை. எல்லோரிடமும் இத்தகைய பணவசதி கிடையாது எனவும் கைதிகள் தெரிவித்தனர். இவை தொடர்பாக தம்மாலான நடவடிக்கைகளை மேற்கொளவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்களுக்குத் தெரிவித்துவிட்டுத் திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அக்மீமன தயாரத்ன தேரருக்கு கொழும்பு நீதிமன்றம் அழைப்பாணை

நீதிமன்றத்தினால் இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த வேளையில் - நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட அக்மீமன தயாரத்ன தேரரை, எதிர்வரும் 25 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று அழைப்பாணை பிறப்பித்தது.

வண.கதலுவே ரத்னசீக தேரர் தாக்கல் செய்திருந்த மனுவை பரிசீலனை செய்த கொழும்பு மாவட்ட நீதிவான் எஸ்.எம்.எஸ். சமரக்கோன் இந்த அழைப்பாணையை விடுத்தார்.

அக்மீமன தயாரத்ன தேரருக்கு எதிராக நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்திருந்தது. இந்த உத்தரவை அவரிடம் கையளிக்க முடியாமல் போனதாக, நீதிமன்ற உத்தியோகத்தர் தம்மிடம் தெரிவித்ததாக நீதிவான் தெரிவித்தார்.

இதனால், நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்பட தேரருக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டிருந்த இடைக்கால தடை உத்தரவை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை நீடிப்பதாகவும் நீதிவான் தெரிவித்தார்.

அத்துடன், அன்றைய தினம் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான வண. ஓமல்பே சோபித தேரர், வண. கொலன்னாவ சுமங்கள தேரர் ஆகியோரையும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

## யாழ்.நல்லூர் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு

யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பிரதேசங்களில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியத்திற்கான நிர்வாகசபைக் கூட்டம் இன்று பிற்பகல் 6 மணியளவில் கன்னாதிடடியில் உள்ள சயன்ஸ் கோல் கல்வி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு அனைத்து நிர்வாகசபை உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். நல்லூர் தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியத் தலைவர் கேட்டுள்ளார்.

## பேரணி தொடர்பான கலந்துரையாடல்

எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ள கண்டனப் பேரணி தொடர்பாக உடுவில் பிரதேச ஊரகக்கிளை நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 4 மணிக்கு சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலுக்கு சகல உடுவில் பிரதேச நிர்வாக சபை உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு தேசிய எழுச்சிப் பேரவையின் உடுவில் பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

## சிறுபான்மைக்...

அரசிற்கு ஆதரவு வழங்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்னர் விதிததுள்ள நிபந்தனைகளை ஆராய்வதற்கு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமைச்சர்கள் மட்டத்தில் மூவர் அடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளார்.

இந்தக் குழுவில் விமானப் போக்குவரத்து மற்றும் கப்பற்துறை முக அமைச்சர் மங்கள சமரவீர, மின்சக்தி, எரிபொருள் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, வர்த்தக நுகர்வோர்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே ஆகியோர் அடங்குகின்றனர்.

இந்த அமைச்சர்கள் அடங்கிய குழுவினர் அடுத்துவரும் சில தினங்களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் மற்றும் அந்தக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற அமளிதுமளிகளை அடுத்து எதிர்க்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 117 பேர் கையெழுத்திட்டு எதிர்க்கட்சியிடம் ஆட்சியை ஒப்படைக்குமாறு சபாநாயகரிடம் மனு ஒன்றைச் சமர்ப்பித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# பங்குச் சந்தை தொடர்பாக இன்று கலந்துரையாடல்!

நாட்டின் தற்போதைய பங்குச் சந்தை நிலவரம் தொடர்பான கருத்தரங்கு இன்றும் நாளையும் யாழ். செம்மணிவீதியிலுள்ள யூறோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பங்குச் சந்தை மற்றும் திறைசேரி உண்டியல் தொடர்பான சகல சந்தேகங்களையும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்வதன் மூலம் மக்கள் தமது சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று பிற்பகல் 2.30 மணியளவில் முதலாவது கருத்தரங்கும், நாளை காலை 9.30 மணிக்கு இரண்டாவது கருத்தரங்கும் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்துரையை வழங்கவென கொழும்பு பங்குச் சந்தை நிறுவனமான பாட்லீட்மலோறி நிறுவனத்தின் அதிகாரிகள் வருகை தரவுள்ளனர்.

# சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று பல்கலையில் நடைபெறும்

பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று நடைபெறவுள்ளது.

உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறியில் இரண்டு வருடங்களைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கே இந்தச் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வானது, இன்று காலை 11 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

இந்தச்சான்றிதழ்களை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ் வழங்குவார். (12)

# மேற்கு நாடுகளின் நிபந்தனைக்கு அரசாங்கம் அடிபணியக் கூடாது!

## தேசப்பற்று தேசிய முன்னணி கோரிக்கை

(கொழும்பு)

நிதியுதவிகள் வழங்கப்பட வேண்டுமானால் விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென மேற்குலக நாடுகள் விதிக்கும் நிபந்தனைகளுக்கு அடிபணியாமல் - நடவடிக்கைகளை மேற்கொள்வது அரசாங்கத்தின் பொறுப்பு என்று தேசப்பற்று தேசிய முன்னணி தெரிவித்துள்ளது.

இந்த நிபந்தனையூடாக பெற்றுக் கொள்ளப்படுகின்ற நிதியுதவி இலங்கையின் இறையாண்மைக்கு விலை குறிப்பதாகவே அமையும் என்று தேசப்பற்று தேசிய முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் - நாட்டின் தேசியப் பிரச்சினையை எவ்வாறு தீர்த்துக் கொள்வதென்பதை நாடு தீர்மானித்துக் கொள்ளும். இந்தப் பிரச்சினை கடன் வழங்கும் நாடுகளினதோ, நிறுவனங்களினதோ பிரச்சினையல்ல.

வெளிநாட்டு நிதியுதவிகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார யோசனை தொடர்பாக அரசு பேச்சுவார்த்தை நடத்தினால் அது விடுதலைப் புலிகள் இயக்கம் பெறும் வெற்றியாகும்.

இதேவேளை, விடுதலைப் புலிகளோடு பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சி குறித்து தாம் மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் தேசப்பற்று தேசிய முன்னணி தெரிவித்துள்ளது.

## இரண்டு இராணுவத்தினர்...

ருக்கும் 551 ஆவது பிரிகேட்டில் பணியாற்றும் இவர்கள் இருவரும் கடந்த எட்டாம் திகதி இரவு 8.30 மணியளவில் மணற்காட்டில் உள்ள இராணுவ முகாமிற்கு சென்றிருந்தனர்.

மணற்காடு முகாமிலுள்ள இராணுவ அதிகாரி ஒருவரை சந்திக்கவே இவர்கள் சென்றிருந்தனர்.

மணற்காடு முகாமில் குறிப்பிட்ட இராணுவ அதிகாரியை சந்தித்த பின்னர் இரவு 9.00 மணியளவில் நாகர்கோவில் இராணுவத் தளம் நோக்கி திரும்பிச்சென்றதை இராணுவத்தினர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஆனால் இவர்கள் இதுவரை தளம் திரும்பவில்லை. காணமற்போன இரண்டு படையினரையும் கண்டுபிடிப்பதற்கு தேடுதல்கள் நடத்தப்பட்டபோதும், இதுவரை இவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை.

இந்தச் சம்பவம் குறித்து இராணுவப் பொலிஸாரும், பொலிஸாரும் விசாரணைகளை நடத்திவரும் அதேவேளை, இதுதொடர்பாக இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவிடமும் முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.06.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.